பக்கங்கள்:-28

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 23 | சனிக்கிழமை | 09.11.2024 | அதிர்வு 99 |
|---|---|---|---|---|---|

## கணவரின் வழியிலேயே எனது அரசியல் பயணம்



தொடரும் என்கிறார் சசிகலா ரவிராஜ்

(விரிவான செய்தி 6 ஆம் பக்கத்தில்)



மாவட்ட தெரிவில் மக்கள் தன்னை நிராகரித்தால்

# தேசியப் பட்டியல் எம்.பியாக சுமந்திரன் வரவே மாட்டார்!

## அவரே திட்டவட்டமாகத் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் தன்னை மாவட்ட ரீதியான தேர்தலில் நிராகரித்தால் தான் தேசியப் பட்டியலின் ஊடாக நாடாளுமன்றத்துக்கு வரவே மாட்டார் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரன்.

பிரபல ஊடகர் சந்துருவுக்கு வழங்கிய தேர்தல் கால ஊடகச் செவ்வியொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

05

வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்வதாகத் தெரிவித்து

## வவுனியாவில் பண மோசடி! 3 இசைக்கலைஞர்கள் கைது!



(ந.லோகதயாளன்)

வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்வதாகத் தெரிவித்து பண மோசடியில் ஈடுபட்ட வவுனியாவைச் சேர்ந்த இசைக்கலைஞர்கள் மூவர் நிதிக் குற்றப் புலனாய்வுப்

05




இடைநிறுத்தப்பட்டுள்ள உள்ளூராட்சி தேர்தலை இவ்வாண்டு இறுதிக்குள்ளேயே நடத்த முடியும் என முன்னர் கூறி வந்த தேர்தல் ஆணையம், இப்போது பெரும்பாலும் அடுத்த வருட ஆரம்பத்தில் – அதாவது ஜனவரி 2025 இல் – அது நடைபெறும் எனத் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும் பெரும்பாலும்

05










# முல்லைத்தீவு மாவட்ட காணிப் பிரச்சினைகள்: மக்களுடன் வடக்கு ஆளுநர் கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு விஜயம் மேற்கொண்டார். இதன்போது மாவட்ட அரச அதிபர் உமாமகேஸ்வரன், ஆளுநரை வரவேற்றதோடு இருவருக்கும் இடையில் மாவட்டத்தின் அபிவிருத்தி நிலைமைகள் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் பின்னர் காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் தீர்க்கப்படாது இருக்கும் காணிப் பிரச்சினைகள் மற்றும் காணிப் பிணக்குகள் தொடர்பில் மாவட்ட மக்களுடனும் உரிய தரப்பினருடனும் விரிவாகக் கலந்துரையாடி சில பிரச்சினைகளுக்கு இறுதித் தீர்வைப் பெற்றுக்கொடுத்ததுடன் முடிவுகள் எட்டப்படாத காணிப்பிரச்சினைகளுக்கு எதிர்காலத்தில் விரைவாக தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் ஆளுநர் உறுதியளித்தார்.

இதன்போது வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் குணபாலன், வடக்கு மாகாண காணி ஆணையாளர் சோதிநாதன், முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் காணிக் கிளையின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.









யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
இலங்கைத் தமிழரசுக் கட்சி
M.A.சுமந்திரன்
ஆட்புலம் -ஆதாரம் -ஆளுகை
1




# இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 3,000 சாரதி அனுமதிப்பத்திரங்கள் இடைநிறுத்தம்

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நீதி மன்றங்கள் ஊடாக 3,000 இற்கும் மேற்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 3,249 சாரதி அனுமதிப்பத்திரங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சாரதிகள் ஈடுபட்ட பல குற்றச்செயல்கள் தொடர்பான வழக்கு விசாரணைகளின் போதே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பேக்கரி உற்பத்திகளின் விலைகளை குறைப்பது தொடர்பில் அவதானம்

ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளமைக்கு இணையாக பேக்கரி மற்றும் சிற்றுண்டி உற்பத்திகளின் விலைகளை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

உணவு உற்பத்திகளின் விலை குறைப்பு வீதம் தொடர்பில் பொதுமக்களால் நுகர்வோர் விவகார அதிகார சபையில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

ரூபாவின் பெறுமதி வலுவடைந்தமையின் பலன் மற்றும் மூலப்பொருள்களின் விலை குறைப்பின் பலன் என்பனவற்றை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் நடவடிக்கை எடுக்கின்றார்களா? என்பதை ஆராய்வதற்கும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு இணையாக பேக்கரி உரிமையாளர்களின் சங்கத்தினரையும் ஹோட்டல் உரிமையாளர்களின் சங்கத்தினரையும் அழைத்து விலை குறைப்பு தொடர்பில் கலந்துரையாட திட்டமிடப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.



# ஆறு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுப்பு



நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையினால் ஆறு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பதுளை, கண்டி, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி மற்றும் குருநாகல் ஆகிய ஆறு மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, – ஹாலி – எல வெலிமடை வீதியின் 100 ஆவது கிலோ மீற்றர் மைல்கல் பகுதியில் மண்சரிவு ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்காரணமாக குறித்த வீதியை பயன்படுத்தும் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு பதுளை அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

அதேநேரம், கண்டி – அக்குறனை பகுதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உதயராசாவுக்கு மொட்டு உறுப்பினர் ஆதரவு



(கி.வசந்தன்)

நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் தபால் பெட்டிச் சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் ப.உதயராசாவுக்கு தனது ஆதரவைத் தெரிவிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

“மக்கள் மாற்றம் ஒன்றை விரும்பியுள்ளனர். அந்தவகையில் நிலையான அபிவிருத்தியுடனான மாற்றத்தை வன்னி மாவட்டத்தில் எமது உதயராசாவால் மாத்திரமே கொண்டு வர முடியும். அந்தவகையில் அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும். அதற்காக எனது ஆதரவை வழங்குவதுடன், அவரது வெற்றிக்காக தொடர்ச்சியான பங்களிப்புக்களை வழங்குவேன்.” – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்த மாதத்தில் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான உத்தியோகப் பூர்வ அறிவிப்பை தேர்தல் ஆணையம் விடுக்கும் என்றும், அதற்கு அடுத்த மாதத்தில் அதாவது ஜனவரி 2025 இல் வாக்களிப்பு இடம்பெறும் என்றும் தேர்தல் ஆணையத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். இரத்நாயக்கா இப்போது தெரிவித்திருக்கிறார்.

முதலில் 2023 மார்ச் 9ஆம் திகதி இந்தத் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. எனினும் அந்தத் தேர்தலுக்கான நிதியை அப்போதைய ரணிலின் அரசு வழங்காமல் முட்டுக்கட்டை போட்டதால் தேர்தல் ஆணையம் அந்த தேர்தலை 2023 ஏப்ரல் 25ஆம் திகதி நடத்துவதாக அடுத்த அறிவிப்பை விடுத்தது. எனினும் அதன் பின்னரும் உரிய நிதி ரணில் தலைமையிலான அரசினால் விடுவிக்கப்படாத சூழலில் அந்தத் தேர்தலை கால வரையறையின்றி ஒத்தி வைத்தது தேர்தல் ஆணையம்.

எனினும் இத்தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரித்த உயர் நீதிமன்றம் இயன்ற விரைவில் உடனடியாக உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு உத்தரவிட்டிருந்தது.

அதன்படி இந்தப் பொதுத் தேர்தல் முடிந்ததும் உள்ளூராட்சி தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் தயாராகி வருகின்றது.

ஆனால் 2023 பெப்ரவரியில் – 2022 ஆம் ஆண்டுக்குரிய வேட்பாளர் பதிவு பட்டியலின் அடிப்படையில் – கோரப்பட்ட வேட்பு மனுக்களின் பிரகாரம் அத்தேர்தலை இரண்டு வருடங்கள் கழித்து அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடத்துவது சரியானதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக, இரண்டு வருடங்களுக்கு முந்திய அறிவிப்பின் அடிப்படையில் இப்போது தேர்தலை நடத்த முற்பட்டால் புதிதாக வாக்காளர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் தகுதியுடைய சுமார் 5 லட்சம் பேர் இந்தத் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்படும்.

அதனால் நிலுவையில் உள்ள இந்தத் தேர்தலை அப்படியே நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் முயற்சி எடுத்தாலும், அதற்கு நீதிமன்றம் ஊடாகத் தடை விதித்து, புதிய வேட்பு மனுக்களை ஏற்று, அதன் அடிப்படையில் ஆரம்பத்தில் இருந்து புதிதாக தேர்தலை நடத்தச் செய்வதற்கு பல தரப்புக்களும் மும்முரமான ஆலோசனையில் இருந்து வருகின்றன என்று தெரிகிறது.

புதிதாக வேட்பு மனு ஏற்று அவற்றின் அடிப்படையில் தேர்தலை நடத்துவது என்றால் இன்னும் மேலதிகமாக இரண்டு, மூன்று மாதங்கள் பிடிக்கும் என்பதுதான் இப்போதுள்ள நிலைமையாகும்...!

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இசைக்கலைஞர்களாகச் செயற்படும் 3 இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் சமயங்களில் பக்க வாத்தியக் கலைஞர் எனும் அடிப்படையில் வெளிநாடுக்கு அழைத்துச் செல்வதாகத் தெரிவித்தே தன்னிடம் பணத்தைப் பெற்றனர் என்று வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்திருந்தார்.

அந்தமுறைப்பாட்டைமேற்கொண்டவர் தன்னை வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்வதாகத் தெரிவித்து அதற்காக ஒரு கோடியே 66 இலட்சம் ரூபா பணத்தை மேற்படி இசைக்கலைஞர்கள் பெற்றனர் என்றும், அந்தப் பணத்தை அந்தக் கலைஞர்களில் ஒருவரது வங்கிக்கணக்கில் தான் வைப்புச் செய்தார் என்றும் முறையிட்டிருந்தார்.

அதற்கமைய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மூவரும் இதற்கு முன்பும் சிலரிடம் பணம் பெற்று அவர்களை வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்றனர் என்று கூறப்படுவதனால் மூவரின் வங்கிக் கணக்குகளும் பரிசோதிக்கப்படுவதோடு வாக்குமூலங்களைப் பெறுவதற்காக மூவரும் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## தேசியப் பட்டியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்த சில விடயங்கள் வருமாறு:–

“இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து வேட்பாளர் நியமனம் கிடைக்கவில்லை என்பதனால் வேறு கட்சிகளிலும், சுயேச்சைகளிலும் போட்டியிடுபவர்களினாலேயே தமிழரசு மீது அதிகமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

இதேநேரம் அநுராகுமார திஸாநாயக்காவின் கட்சியைப் பொறுத்த மட்டில் ஊழல் அற்ற ஆட்சி, நேர்மையான நிர்வாகம்தொடர்பில்தமிழர்களிடம்ஒருநம்பிக்கையான எதிர்பார்ப்பு இருக்கலாம். ஆனால், தமிழர்களின் சுயாட்சிக் கோரிக்கையில் அவர்களுக்கு முழுமையான ஈடுபாடு கிடையாது. நாட்டில் எல்லாரும் சமமாகப் பேணப்பட்டால் – நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்தால் – எல்லாப் பிரச்சினைகளும் தீரும் என அவர்கள் எண்ணுகின்றார்கள்.

தமிழர்கள் தனியான ஒரு மக்கள் குழாம், அவர்கள் தனியான தேசம் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்களிடம் பிற நல்ல விடயங்கள் இருக்கலாம். ஆனால், எங்களின் அடிப்படை அரசியல் அபிலாஷைகள் தொடர்பில் இணங்காதவர்களாகவே அவர்கள் இருக்கின்றார்கள். ஆகவேதான் நாடாளுமன்றத் தேர்தலில் எமக்கு வாக்களியுங்கள் எனக் கோருகின்றோம்.

இதேநேரம் முதன் முதல் 2010 இல் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் வந்தாலும் அதன் பின்பு இரண்டு தடவைகள் நேரடியாகப் போட்டியிட்டே நாடாளுமன்றம் சென்றேன். இம்முறையும் வெற்றியீட்டியே நாடாளுமன்றம் செல்வேனேயன்றி, தேர்தலில் மக்கள் என்னை நிராகரித்தால் நான் தேசியப் பட்டியலின் ஊடாக நாடாளுமன்றத்துக்கு வரவேமாட்டேன்.” – என்றார்.



# கணவரின் வழியிலேயே எனது அரசியல் பயணம்

## தொடரும் என்கிறார் சசிகலா ரவிராஜ்

(எஸ்.நிதர்ஷன்)

"ஜனநாயக வழியில் தமிழ் மக்களின் உரிமைக்கான பயணத்தை நேர்த்தியாக முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கே உண்டு. எனவே, மக்கள் தங்கள் முழுமையான ஆதரவை சங்குச் சின்னத்துக்கு வழங்க வேண்டும்."

– இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜ் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி கிழக்கு, உடுத்துறையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பதற்குப் பலரும் இறக்கப்பட்டுள்ளார்கள். மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். யார் வருகின்றார்கள், எதனைக் கூறுகின்றார்கள் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

எமது கூட்டணிதான் கட்சிகளை ஒன்றிணைத்து பலமான அனுபமானவர்களை ஒன்றிணைத்துப் பயணிக்கின்றது. எனவே, எமது கூட்டணிக்கே எமது மக்கள் வாக்களிக்க வேண்டும்.

ஒற்றுமையை வெளிப்படுத்த ஒவ்வொரு வாக்குகளையும் மக்கள் எமது சங்குச் சின்னத்துக்கு வழங்க வேண்டும்.

எனது கணவரின் வழியில் எனது பயணம் தொடர எனது இலக்கமான 7 ஆம் இலக்கத்துக்கும் புள்ளடி இடுங்கள்."

– என்றார்.







# செஞ்சட்டைச் சிங்களமும் தன் முகமூடியை கழற்றிவிட்டது என்கிறார் பிரேமச்சந்திரன்!



"சமஷ்டி அரசமைப்புக்கும் ஐ.நா. தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் எமது ஆட்சியில் ஒருபோதும் இடமளியோம்" சொல்லியிருப்பவர் சாதாரணமானவர் அல்லர். ஜே.வி.பியின் அமைச்சரவையின் பேச்சாளரும் அக்கட்சியின் முக்கியஸ்தருமான விஜித ஹேரத்.

ஆகவே "தேசிய மக்கள் சக்தி" என்று புதுப்பெயர் வைத்துக்கொண்டுள்ள செஞ்சட்டை ஜே.வி.பியினரும் கூட சிங்கள ஆட்சியாளர்களின் இலஞ்ச ஊழல்களைக் களைவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கிறார்களே தவிர, இவ்வளவு இலஞ்ச ஊழல்கள் நடைபெறுவதற்குக் காரணமாக அமைந்த தேசிய இனப் பிரச்சினையை, ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் திருப்தியுறும் வகையில் தீர்த்து, நாட்டை முன்னேற்றத்தை நோக்கிக் கொண்டு செல்ல முற்படவில்லை என்பது நிரூபணமாகிறது."

– இப்படி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தமது உரையில் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:–

ஜே.வி.பியினரின் மாற்றம் யாது என்பதை தமிழ் இளைஞர்களும் தமிழ் மக்களும் இப்பொழுது நன்கு உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறோம். இந்த நாட்டில் இனப் பிரச்சினையை உருவாக்கியவர்கள் யார்? அதனை மையமாக வைத்து தமிழர்கள்மீது வன்முறைகளையும் ஒடுக்குமுறைகளையும் கட்டவிழ்த்து விட்டு இனவழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் யார்? அதற்காக வாங்கிய ஆயுதங்கள் எவ்வளவு பில்லியன் டொலர்? அதில் நடைபெற்ற ஊழல், ஆயுதக் கொள்வனவிற்கு யாருக்கு அனுமதி வழங்குவது என்பதற்காக பெற்றுக்கொண்ட இலஞ்சம் என்பவையே நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார வங்குரோத்துக்கும் அரசியல் கையறு நிலைக்கும் காரணம் என்பதை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

தென்னிலங்கை இளைஞர்களைப் போலவே தமிழ் இளைஞர்கள் சிலரும் ஜே.வி.பியினர் ஆட்சிக்கு வந்தால் மாற்றம் ஏற்படும் என்று கருதுகின்றனர். இதுவரை காலமும் மத்திய அரசிற்கு அழுத்தக் குழுவாக மட்டுமே செயற்பட்டவர்கள் தமது சொந்த முகத்துடன் மக்கள் மத்தியில் வரமுடியாமையால் "தேசிய மக்கள் சக்தி" என்ற முகத்திரையுடன் தேர்தலை எதிர்கொள்கின்றனர். அவர்கள் கூறும் மாற்றம் என்பது தென்னிலங்கை நடுத்தர வர்க்க மக்களின் செல்வாக்கைப் பெற்றுக்கொள்வதற்கான தந்திரோபாயமே தவிர, உண்மையான தேசப்பற்றல்ல என்பதை எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த புதன்கிழமை அமைச்சர் விஜித ஹேரத் எமது கூற்றை மெய்ப்பிப்பதுபோல் வடக்கு கிழக்கிற்கு சமஷ்டியும் கிடையாது என்று கூறியிருக்கின்றமையுடன் எம் மீது மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட இனவழிப்பு நடவடிக்கையை விசாரித்து குற்றவாளிகளை தண்டிக்கமாட்டோம் என்றும் ஐ.நா.வின் தீர்மானங்கள் எதனையும் நடைமுறைப்படுத்தமாட்டோம் என்றும் ஊடகவியாலாளர்களுடனான சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

இதன் மூலம் இவர்களும் சிங்கள மக்களை தமிழர்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டு, தமிழர் விரோத நடவடிக்கையை மூலதனமாக்கி, வாக்கு வேட்டையாடும் சிறுபுத்தி படைத்தவர்கள் என்பதை நிரூபித்து விட்டனர். எனவே எமது மக்களும் இளைஞர்களும் இவர்களது "மாற்றம்" கோஷத்திற்குப் பின்னால் இழுபட்டுவிடாமல் எமது உரிமை அரசியல் மட்டுமே எமக்கான விடிவை ஏற்படுத்தும் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். எமக்குத் தேவையான மாற்றம் என்பது போலித் தேசியம் பேசி, தமிழினத்தை தென்னிலங்கை அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் கரைக்கத் துடிக்கும் தரகர்களிடமிருந்து எம்மினத்தைக் காத்து, உரிமை அரசியலை விட்டுக்கொடுப்பின்றி முன்னெடுக்கத் துடிக்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினரை ஆதரிப்பதாக இருக்க வேண்டுமேயன்றி, இலஞ்ச, ஊழல் ஒழிப்பு என்ற மாயையின் பின்னால் இழுபட்டுச் செல்வதாக இருக்கக்கூடாது.

தேசிய இனப்பிரச்சினையை மூடிமறைத்து, தமிழர்களுக்கு உரித்துடைய உரிமைகளை நிராகரித்து, இந்த நாட்டை சிங்கள – பௌத்த நாடாக மாற்றி, தமிழர்கள் ஒன்றில் தென்னிலங்கை சமூகத்துடன் கரைந்துவிட வேண்டும் அல்லது சிங்கள – பௌத்த மேலாதிக்க சக்திகளின் பிடியில் அடிமைகளாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எமது கைகளைக் கொண்டே எமது கண்களைக் குத்தும் தந்திரோபாயத்தை சிங்கள அரசியல் சமூகம் கைக்கொண்டுள்ளது.

எமது பிரதேசத்தில் அதிகளவிலான கட்சிகளும் சுயேச்சைகளும் களமிறக்கப்பட்டிருப்பதிலிருந்தே இந்த உண்மையை நாம் நன்கு உணரமுடியும். வாக்கு கேட்பவர்கள் அனைவருமே தேசியத்தை மையமாக வைத்து அபிவிருத்தியையும் மேற்கொள்வதாகச் சொல்லியே வாக்கு சேகரிக்கின்றனர். இவர்கள் உண்மையில் தேசியத்தின் மீது விசுவாசமிக்கவர்களாக இருந்திருந்தால் உருவாக்கப்பட்டுள்ள ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு ஆதரவாகச் செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவர்கள் தமிழ்த் தேசியத்தின் இன்றைய நிலையை நன்குணர்ந்து, சீர்தூக்கிப் பார்த்து, தெளிவான கொள்கை முடிவெடுத்துள்ளார்களா என்றால் இல்லை என்பதே பதிலாக இருக்கும். இத்தகைய சக்திகள் அனைத்தும் தயவு தாட்சண்யமின்றி புறந்தள்ளப்படவேண்டும்.

எனவே எமது வாக்குகள் அனைத்தும் சிந்தாமல், சிதறாமல் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சங்கு சின்னத்திற்கே அளிக்கப்பட வேண்டும். கடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் விட்ட தவறை இம்முறை எமது மக்கள் விடமாட்டார்கள். எமது உரிமைகளை நிலைநாட்ட சங்குச் சின்னத்திற்கும் என்னை பெருவாரியான வாக்குகளுடன் நாடாளுமன்றம் அனுப்புவதற்கும் புள்ளடியிட்டு தேசியம் காக்கும் ஆணையை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கே எமது மக்கள் வழங்குவார்கள்.

எமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும். – என்று உரைத்தார்.


## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2024

"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்."

– மூப்பர் அம்பிலோகியோஸ்
(கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சுரத்தில்லாத் தேர்தல்

பொதுத் தேர்தலுக்கு இன்னமும் ஐந்து நாள்களே உள்ளன. பிரசாரம் மூன்று நாள்களில் முடிந்து விடும்.

ஆயினும் தேசிய ரீதியில் இந்த பொதுத் தேர்தலில் மக்களுக்கு ஈடுபாடு - உற்சாகம் - குறைந்திருப்பதாக தேர்தல் கண்காணிப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தப் பொதுத் தேர்தலில் நாடு முழுவதிலும் 8,800 க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். ஆனால் அவர்களில் ஆயிரத்துக்கும் குறைவானவர்களே தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர் என்ற கணிப்பை - அவதானிப்பை - சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை (பவ்ரல்) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோஹண ஹெட்டியாராய்ச்சி நேற்று முன்தினம் தெரிவித்திருக்கிறார்.

ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்து தேர்தல்கள் வருவதால், அவற்றில் ஈடுபட வேண்டிய கட்டாயம் - அழுத்தம் - அரசியல் கட்சிகள் மத்தியில் இத்தகைய குறைந்த அளவிலான உற்சாகம் ஏற்படுவதற்கு காரணமாக இருக்கலாம் என்று அவர் குறிப்பிடுகிறார்.

இதுதான் நிலைமை என்றால் இந்தத் தேர்தலின் பின்னர் நடக்கக்கூடிய உள்ளூராட்சித் தேர்தலிலும், அதன் பின்னர் நடைபெறக்கூடிய மாகாண சபை தேர்தல்களிலும் கூட மக்களின் ஈடுபாடும் பங்களிப்பும் எதிர்பார்த்த அளவுக்கு இருக்க மாட்டாது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது.

கட்சிகள், வேட்பாளர்கள் மட்டுமின்றி, வாக்காளர்களும் இத்தேர்தல் குறித்து அதிக ஆர்வம் காட்டவில்லை என்று அவர் குறிப்பிடுகிறார்.

பொதுமக்கள் மத்தியில் தேர்தல் குறித்து தீவிரமான ஈடுபாடு இல்லாத இந்தச் சூழலால் பொதுத் தேர்தலில் வாக்களிப்பு வீதம் பெருமளவில் குறையும் சாத்தியம் இருப்பதாகவும் சுயாதீன வட்டாரங்கள் கருதுகின்றன.

பாரம்பரியமாக நாட்டில் கோலோச்சி வந்த அரசியல் கட்சிகள் மீது மக்களுக்கு ஏமாற்றம், அதிருப்தி போன்றவை உள்ளன என்பதும் வெளிப்படையானது.

போதாக்குறைக்கு தேர்தல் பிரசாரம் தொடர்பான நிதி சட்டங்கள் வழமையை விட இம்முறை அதிகம் இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்தப்படகூடிய அளவு கண்காணிப்புகள் இருப்பதால் கட்சிகள், தரப்புக்கள், தனி நபர்கள், நிறுவனங்கள் தேர்தல்களில் பணத்தை செலவிடுவதில் பின்னடிப்புக் காணப்படுவதாக சுயாதீன வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

தேர்தலுக்காக அள்ளிக் கொட்டப்படும் பணத்தின் அளவு குறைந்து இருப்பதால் தேர்தல் சுறுசுறுப்பும் குறைந்து இருப்பதாக சில வட்டாரங்கள் கருதுகின்றன.

இந்தத் தேர்தலில் நூற்றுக்கணக்கான அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன. அவை எல்லாம் சேர்ந்து நாடு முழுவதிலும் சுமார் 6 லட்சம் பிரசார அலுவலகங்களைத் ஸ்தாபிப்பதற்கு இடம் உண்டு. அனுமதி வழங்கப்பட வேண்டும். ஆனால் சுமார் 9,200 தேர்தல் அலுவலகங்கள் மட்டுமே வேட்பாளர்களினால் அமைக்கப்பட்டுள்ளன என்று றோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவிக்கிறார். அதையும் கூட தேர்தலில் வேட்பாளர்களின் ஈடுபாட்டை - தீவிரத்தை - வெளிப்படுத்தும் ஒரு புள்ளி விவரமாகக் கருத முடியும்.

தேர்தலின் போது வேட்பாளர்கள் செலவிடும் நிதி பற்றிய கண்காணிப்பை தேர்தல் ஆணையம் மற்றும் சுயாதீன கண்காணிப்பாளர்கள் கண்கொத்திப் பாம்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்ற ஓர் உத்தியோகப் பற்றற்ற தகவல் பரவலாக உண்டு. அதன் காரணமாகவும் தேர்தல் பரபரப்பும், பிரசார சூடும், ஆரவாரங்களும் குறைந்ததான ஒரு தோற்றப்பாடு நிலவுகின்றது என்றும் கூறப்படுகின்றது.

கட்சிகளும் தரப்புக்களும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் காட்டிய தீவிரத்தையும் மோதல் போக்கையும் நாடாளுமன்றத் தேர்தலில் வெளிப்படுத்தவில்லை என்பதும் பொதுமக்களின்பங்களிப்புடன்கூடியதேர்தல்நடவடிக்கைகள் சுரத்துக் குறைந்து காணப்படுகின்றன என்பதும் மறுப்பதற்கு இல்லை.

ஆயினும் ஜனநாயக தேர்தல் முறைமைகளில் இத்தகைய ஏற்றங்களும் இறக்கங்களும் அவ்வப்போது வந்து போகின்றவைதான். அதன் காரணமாக ஜனநாயகத்தின் வலிமை குன்றிவிட்டதாகக் கூறுவதில் அர்த்தமில்லை.





# உங்கள் நம்பிக்கை பலரை ஊக்குவிக்கும் கமலா ஹாரிஸுக்கு ராகுல் காந்தி கடிதம்

கமலா ஹாரிஸின் உற்சாகமான தேர்தல் பிரச்சாரத்துக்காக அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ள மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, அவரின் நம்பிக்கைச் செய்தி பலரை ஊக்குவிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

பதவியில் இருந்து வெளியேறும் அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸுக்கு ராகுல் காந்தி எழுதிய கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

நவம்பர் 7 ஆம் திகதியிடப்பட்ட அந்தக் கடிதத்தில் ராகுல் காந்தி மேலும் குறிப்பிடுகையில்,

“ஜனாதிபதி தேர்தலில் உங்களின் உற்சாகமான பிரச்சாரத்துக்காக உங்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்பிக்கையினை ஒருங்கிணைக்கும் உங்களின் செய்தி பலரை ஊக்குவிக்கும்.

ஜோ பைடனின் நிர்வாகத்தின் கீழ் இந்தியாவும், அமெரிக்காவும் உலகின் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் தங்களின் ஒத்துழைப்பை ஆழப்படுத்தியுள்ளன.

ஜனநாயக மதிப்பீடுகளுக்கான நமது பகிரப்பட்ட அர்ப்பணிப்பு இனியும் நமது நட்புறவினை வழிநடத்தும். துணை ஜனாதிபதியாக மக்களை ஒன்றிணைப்பதற்கும், பொதுவான ஒரு நிலைப்பாட்டினைக் கண்டறிவதற்குமான உங்களின் உறுதி நினைவுகூரப்படும். உங்களின் எதிர்கால முயற்சிகள் வெற்றி பெற எனது வாழ்த்துக்கள்.” – என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள டொனால்ட் ட்ரம்புக்கும் ராகுல் காந்தி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

“அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக தேர்வாகியுள்ள உங்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலத்துக்கான உங்களின் பார்வையில் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். உங்களின் தலைமையின் கீழ், பரஸ்பர விருப்பமுள்ள துறைகளில் இருநாடுகளின் ஒத்துழைப்பும் மேலும் விரிவடையும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்தியர்கள், அமெரிக்கர்கள் ஆகிய இருவருக்குமான வழிகள் மற்றும் வாய்ப்புகளை உருவாக்குவதில் நாம் தொடந்து பணியாற்றுவோம்.” என்று தெரிவித்துள்ளார்.

# சல்மான் கானுக்கு மீண்டும் லாரன்ஸ் கும்பல் மிரட்டல்!



இந்திய சினிமாவின் உச்ச நட்சத்திரங்களில் ஒருவரான சல்மான் கானுக்கு லாரன்ஸ் பிஷ்னோய் கும்பல் மீண்டும் கொலை மிரட்டல் விடுத்துள்ளது.

சல்மான் கான் மற்றும் லாரன்ஸ் பிஷ்னோய் ஆகிய இருவரையும் தொடர்புப்படுத்தி வெளியாகி உள்ள பாடலால் இம்முறை மிரட்டல் வந்துள்ளது.

கடந்த வியாழன் அன்று மும்பை போக்குவரத்து பொலிஸ் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்ட லாரன்ஸ் பிஷ்னோய் கும்பல், மிரட்டல் விடுத்துள்ளது. சல்மான் கான் மற்றும் லாரன்ஸ் பிஷ்னோய் என இருவரையும் தொடர்புப்படுத்தி உருவாகியுள்ள பாடலைக் குறிப்பிட்டு, அந்த பாடலாசிரியர் இதற்கான பின்விளைவுகளை ஒரு மாத காலத்துக்குள் எதிர்கொள்வார் என மிரட்டலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘இனி அந்த பாடலாசிரியர் பாடலே எழுத முடியாது. சல்மான் கானுக்கு தைரியம் இருந்தால் அவரை பாதுகாக்க சொல்லுங்கள் பார்ப்போம்’ என மிரட்டலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1998 இல் மானை வேட்டையாடிய விவகாரத்தில் சல்மான் கானுக்கு தொடர்ந்து கொலை மிரட்டல் விடுத்து வருகிறது லாரன்ஸ் பிஷ்னோய் கும்பல். அவர் மன்னிப்பு கேட்க வேண்டும், பணம் தர வேண்டும் போன்ற நிபந்தனைகளையும் அவ்வப்போது அந்த கும்பல் வைப்பது உண்டு.

இதற்கிடையே நடிகர் ஷாருக்கானுக்கு விடுக்கப்பட்ட கொலை மிரட்டல் குறித்து மும்பை பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மும்பை – பாந்த்ரா பொலிஸாரை தொடர்பு கொண்டு இந்த மிரட்டல் விடுக்கப்பட்டது. அந்த தொலைபேசி எண் ராய்ப்பூரை சேர்ந்த வழக்கறிஞர் ஃபைசன் கான் பெயரில் வாங்கப்பட்டுள்ளது. அவரிடம் விசாரணை மேற்கொண்டதில் தனது தொலைபேசி எண் 2 ஆம் திகதி தொலைந்து போனதாக தெரிவித்துள்ளார். இதன் பின்னணியில் உள்ள சதியை பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.



# ரஷ்ய - உக்ரைன் இடையிலான யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவர ட்ரம்ப் நடவடிக்கை

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவாகியுள்ள நிலையில், எதிர்வரும் ஜனவரி 3 ஆம் திகதி அமெரிக்கக் காங்கிரசின் 119 ஆம் அமர்வு இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காங்கிரசிற்காக தெரிவான செனெட்டர்கள் பதவியேற்கவுள்ளனர். இதன்பின்னர் புதிய காங்கிரஸ் உறுப்பினர்கள், புதிதாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்பின் தெரிவினை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்துவர்.

சம்பிரதாயபூர்வமாக அவரது பதவி உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி புதிய ஜனாதிபதியும், துணை ஜனாதிபதியும் பதவியேற்பார்கள்.

பதவி ஏற்பு நிகழ்வினை பொதுமக்கள் நேரடியாகப் பார்வையிட அனுமதிக்கப்படுவர்.

ரஷ்யாவுடனான போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா செயல்படுவதன் மூலம் பல்லாயிரக் கணக்கான அமெரிக்க டொலர்களை செலவிடுவது குறித்து டொனால்ட் ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.


பேச்சுவார்த்தை மூலம் சமாதான ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு 24 மணி நேரத்திற்குள் ரஷ்ய– உக்ரைன் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வரத் தான் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல, அமெரிக்காவில் வாழ்வதற்கான சட்டபூர்வ அனுமதியில்லாதவர்களை, நாடு கடத்துவதைத் தவிரத் தனது நிர்வாகத்திற்கு வேறு வழியில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கத் தேர்தலில் டொனால்ட் ட்ரம்பின் வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியினை குடியரசு கட்சியினர் கொண்டாடி வருகின்றனர்.

இந்தநிலையில், கமலா ஹறிஸ் எவ்வாறு ஆதரவினை திரட்ட தவறினார் என்பது குறித்து ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்ட அடிப்படை மாற்றம் ஏதாவது ஏற்பட்டதா? எனக் கவலையினை வெளியிட்டு வருகின்றனர்.





# நைஜீரியா முழுவதும் மின்தடை; பொது மக்கள் பெரும் அவதி!

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் அண்மைக் காலமாக மின் உற்பத்தி குறைந்து வருகிறது.

அதன்படி மின் உற்பத்தி 4,000 மெகா வாட்டாக குறைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அபுஜா, லாகோஸ் மற்றும் கனோ ஆகிய நகரங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

இதனால் இலட்சக்கணக்கான மக்கள் கடும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இது இந்த ஆண்டில் நிகழும் 10ஆவது நாடு தழுவிய மின்தடை என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# சவூதி அரேபிய பாலைவனத்தில் முதல் முறையாகப் பனிப்பொழிவு!





சவூதி அரேபியாவின் அல்-ஜவ்ஃப் பகுதியில் முதல் முறையாகக் கனமழை மற்றும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

அல்-ஜாவ்ஃப் பகுதியில் நிலவும் பனிப்பொழிவால், பாலைவன மணல் வெண்ணிற போர்வை போர்த்தியது போல காட்சியளிக்கும் காணொளிகள் இணையத்தில் வைரலாகி வருகிறன.

வறண்ட பாலைவன நிலப்பரப்பில் இவ்வாறான நிகழ்வுகள் ஏற்படுவது அதிசயமாகப் பார்க்கப்படுகின்றது.

அரபிக் கடலிலிருந்து உருவாகி ஓமன் வரை நீண்டு இருக்கும் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமே இந்த பனிப்பொழிவிற்குக் காரணம் என சவூதி அரேபியாவின் தேசிய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



# வெடுக்குநாறி மலை சிவன் ஆலய விவகாரம்: இருவருக்கு ரி.ஐ.டி. விசாரணைக்கு அழைப்பு

(கி.வசந்தன்)

வவுனியா வடக்கு வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலய விவகாரம் தொடர்பில் அந்த் ஆலயத்தின் முன்னாள் உறுப்பினர்கள் இருவரை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் (ரிஐடி) விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்னாள் தலைவர் சசிகுமார் மற்றும் முன்னாள் செயலாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோரை 2024 நவம்பர் 9 ஆம் திகதி (இன்று) சனிக்கிழமை வவுனியாவில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, முன்னாள் போராளியான சசிகுமாரின் அனைத்து புனர்வாழ்வு ஆவணங்களையும் விசாரணைக்கு கொண்டு வருமாறு பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுத் திணைக்களத்தினால் தொலைபேசி அழைப்பு மூலம் அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

# 48 மணி நேரத்தில் உருவாகும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி



வங்காள விரிகுடாவில் அடுத்த 48 மணி நேரத்தில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகின்றது.

எதிர்வரும் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் இந்த புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி தமிழ் நாட்டின் பல பகுதிகள் மற்றும் இலங்கையின் கரையோரப் பகுதிகளை நோக்கி நகரும் என சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று தெரிவித்தது.

இதேவேளை, இலங்கையின் வடக்கு, வடமேல் மற்றும் மேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் இடைக்கிடையே இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் நிலவுவதாக இலங்கையின் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# நிதி நிறுவனம் ஊடாக மோசடி செய்த நபர் கைது

800 கோடி ரூபாவை மோசடி செய்து நாட்டிலிருந்து தப்பிச் சென்ற நபர் மற்றும் அவரது மனைவி ஆகியோர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் குருணாகல் பகுதியில் நடத்திச் சென்ற பிரமிட் நிதி நிறுவனம் ஊடாக வைப்பாளர்களின் நிதியை மோசடி செய்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருணாகலைச் சேர்ந்த 52 வயதான தம்மிக ரணசிங்க எனும் சந்தேகநபர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் 2022ஆம் ஆண்டில் பிறப்பித்த உத்தரவை அவமதித்து நாட்டிலிருந்து தப்பிச் சென்றிருந்தார்.

மலேஷியாவின் கோலாலம்பூரில் இருந்து நேற்று அதிகாலை அவர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்தார்.

சந்தேகநபர் தொடர்பில் கிடைத்த தகவலுக்கு அமைவாக குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் அவர் கைது செய்யப்பட்டதுடன் அவரை அழைத்துச் செல்வதற்காக வருகைதந்திருந்த அவரது மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரமிட் நிதி நிறுவனம் ஊடாக 2,500 வைப்பாளர்களின் நிதியை சந்தேகநபர் மோசடி செய்துள்ளார்.



# தேசிய தேயிலை விற்பனை வீழ்ச்சி!

இலங்கையின் தேசிய தேயிலை விற்பனை கடந்த ஒக்டோபர் மாதத்தில் சற்று வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, கடந்த செப்டெம்பர் மாதத்தில் 1,207 ரூபா 99 சதமாகக் காணப்பட்ட ஒரு கிலோ கிராம் தேயிலை ஒக்டோபர் மாதத்தில் 1,172 தசம் 15 ரூபாவாக குறைவடைந்துள்ளது.

தேயிலை விற்பனையில் மாதாந்த தரவுகளின்படி வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்ற போதிலும், கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் உயர்வைக்காட்டுவதாக இலங்கை தேயிலை சபை குறிப்பிட்டுள்ளது.



# வெளிநாட்டுப் பண அனுப்பல் இந்த ஆண்டு அதிகரித்தது

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு வெளிநாட்டுப் பண அனுப்பல் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இதன்படி, 2023ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டெம்பர் வரையிலான காலப்பகுதியில் வெளிநாட்டுப் பண அனுப்பல் 4,345 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது.

எனினும் இது இந்த வருடத்தின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 4,844 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது 11.05 சதவீத அதிகரிப்பாகும் என இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.





# பயணிகள் கப்பல் சேவை தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்வு

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் காங்கேசன்துறை மற்றும் நாகப்பட்டினத்துக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை தொடர்பாகக் காணப்படுகின்ற முறைப்பாடுகள் மற்றும் திருப்தியின்மை குறித்து ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் ஆளுநர், துறைமுக அதிகார சபையின் பிரதிப் பிரதம செயற்றட்ட முகாமையாளர், காங்கேசன்துறைத் துறைமுக பொறுப்பு அதிகாரி, உதவி பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் வடக்கு மாகாண சுற்றுலாத் துறை தவிசாளர், பணிப்பாளர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் அதிகாரிகள் மற்றும் ஓட்டோ உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காங்கேசன்துறை சுங்கத்தில் இரண்டு கருமபீடங்களே தற்போது உள்ளதால் பயணிகள் வெளியேற நேர தாமதம் ஏற்படுகின்றது. எனவே, மேலதிகமாக இரண்டு கருமபீடங்களைச் செயற்படுத்துமாறு துறைமுக அதிகார சபை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கடமையாற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் நடத்தைகள் தொடர்பில் உள்ள முறைப்பாடுகளை உரிய வகையில் விசாரணை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கையைத் துரிதமாக மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல் ஆளுநரால் வழங்கப்பட்டது.

சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய கொண்டுவர அனுமதி மறுக்கப்பட்ட பொருட்கள், பழங்கள் போன்றவை தொடர்பில் பயணிகளுக்கு உரிய விழிப்பூட்டல் காங்கேசன்துறை மற்றும் நாகப்பட்டின துறைமுகங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

துறைமுகம் மற்றும் விமான நிலையப் பகுதியில் சேவையில் ஈடுபடும் ஓட்டோ உரிமையாளர்கள் சங்கத்தினரின் கருத்துக்கள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு கலந்துரையாடப்பட்டன.



# சுஜீவ சேனசிங்கவின் சொகுசு வாகனத்தை பகுப்பாய்வுக்கு உட்படுத்த நடவடிக்கை



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க பயன்படுத்திய ஜீப் ரக சொகுசு வாகனம், ஒன்று சேர்க்கப்பட்டமை தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு அமைய, குறித்த வாகனத்தை மேலதிக விசாரணைகளுக்காக அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தில் ஒப்படைப்பதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கொழும்பு நீதவான் தனுஜா லக்மாலியிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இவ்வாறு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்கவின் சார்பில் நீதி மன்றில் முன்னிலையான சட்டத்தரணி மேற்படி வாகனத்தின் பெறுமதி சுமார் 100 மில்லியன் ரூபா எனச் சுட்டிக்காட்டினார்.

இதன்காரணமாக, அந்த வாகனத்தை தங்களது சாரதி ஒருவரின் ஊடாக பொலிஸ் பாதுகாப்புடன் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தில் ஒப்படைப்பதற்கு அனுமதி கோரியிருந்தார்.

இதற்கு அனுமதியளித்த நீதவான், சம்பவம் தொடர்பான அறிக்கையை விரைவில் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்டார்.




# யாழ். மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவின் 3 ஆவது காலாண்டுக்குரிய குழுக் கூட்டம் யாழ். மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச அதிபரால் பின்வரும் விபரங்கள் தெரிவிக்கப்பட்டன.

1.நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட உதயபுரம் – மணியந்தோட்டத்திலிருந்து நகர்புற பாடசாலைக்கு வரும் மாணவர்களின் நன்மை கருதி இலங்கை போக்குவரத்துச் சேவையை பாடசாலை விடுமுறை விட்டு தொடங்கும் நாளிலிருந்து காலை 6.30 மணிக்கு ஆரம்பிக்கும் சேவையானது 7.45 மணிக்கு யாழ். நகரை வந்தடையும் என்றும், பிற்பகல் 1.10 இற்கு யாழ். நகரிலிருந்து ஆரம்பிக்கும் சேவையானது 2.15 இற்கு உதயபுரம் – மணியந்தோட்டத்தைச் சென்றடைய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று அரச அதிபர் தெரிவித்தார்.

2. மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்போது அதிபர் தன்னிச்சையாகத் தீர்மானம் எடுக்காது ஒழுக்காற்று குழு அமைத்து நடவடிக்கை எடுப்பதனை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அரச அதிபர் கேட்டுக்கொண்டார்.

3. இதுவரை சிறுவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பதிவு செய்யாதவர்களுக்கான நடமாடும் சேவையை எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரச அதிபர் அறிவுறுத்தல் வழங்கினார்.

4. பாடசாலை இடை விலகல் மற்றும் மீளிணைப்புச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்த அரச அதிபர், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் அறிவுறுத்தல் வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண நன்னடத்தைப் பணிப்பாளர், யாழ். மாவட்ட உதவி செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ,பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.






# எதிர்வரும் 12 ஆம் திகதி நள்ளிரவுடன் தேர்தல் அலுவலகங்களை அகற்ற வேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

எதிர்வரும் 12ஆம் திகதி நள்ளிரவுடன் வேட்பாளர்கள் தங்களது தேர்தல் அலுவலகங்களை அகற்ற வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்னாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தேர்தல் நடவடிக்கைகளுக்காக வேட்பாளர்கள் தேர்தல் அலுவலகங்களை ஸ்தாபித்துள்ளனர்.

அவற்றில் வாக்களிப்பு நிலையங்களை அண்மித்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், 12 ஆம் திகதி நள்ளிரவுடன் நீக்கப்பட வேண்டும்.

அன்றைய தினத்துக்கு பின்னர் தேர்தல் தொகுதி ஒன்றில் பிரதான கட்சிகள் அல்லது சுயேட்சை குழுக்களுக்காக ஒரு அலுவலகத்தை மாத்திரம் வைத்திருக்க முடியும்.

அன்று முதல் வேட்பாளர்கள் தேர்தல் தொகுதிக்கென ஒரு அலுவலகத்தை மாத்திரம் வைத்திருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று வேட்பாளர்கள் தங்களது வீடுகளை தேர்தல் அலுவலகமாக பயன்படுத்த முடியும்.

எனினும் அவ்வாறான தேர்தல் அலுவலகங்களின் ஊடாக எந்தவித தேர்தல் பிரசார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது.

அதேபோன்று வாக்களிப்பு நிலையத்திலிருந்து 500 மீற்றருக்குள் காணப்படும் சகல தேர்தல் அலுவலகங்களும் அகற்றப்பட வேண்டும் .” – என்றார்.

# ஐ.நா. அமைதி மற்றும் அபிவிருத்திக்கான ஆலோசகருடன் கிழக்கு ஆளுநர் சந்திப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி மற்றும் அபிவிருத்திக் கான ஆலோசகர் Patrick Mc Carthy மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்ன சேகர இடையே சந்திப்பு இடம்பெற் றுள்ளது.

திருகோணமலையிலுள்ள ஆளு நர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நிலவும் காணிப்பிரச்சினை, மீள்குடியேற்றம், சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரை யாடப்பட்டுள்ளது.

மூவின மக்களும் வாழும் கிழக்கு மாகாணத்தில் தேவையற்ற அரசி யல் தலையீடுகளை அடிப்படையாகக் கொண்டு எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்பட மாட்டாது என ஆளுநர் இதன்போது தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் ஆகியவற்றை அண் மித்துள்ள வீதிகள் மக்கள் பாவனைக் காக திறக்கப்பட்டுள்ளமையை பாராட் டிய ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி மற்றும் அபிவிருத்திக்கான ஆலோசகர், இவ்வாறான செயற்பாடுகள் அரசாங் கத்தின் மீதான மக்களின் நம்பிக் கையை மேலும் அதிகரிக்கும் என கூறியுள்ளார்.

அத்துடன், கல்வி, சுகாதாரம், சுற் றுலா உள்ளிட்ட பல விடயங்கள் தொடர் பிலும் இதன்போது கலந்துரையாடப் பட்டுள்ளது.

# சின்னமுத்து நோய்க்கு எதிரான விசேட தடுப்பூசி வழங்கும் திட்டம்

## யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று





சின்னமுத்து நோய்க்கு எதிரான விசேட தடுப்பூசி வழங்கும் திட்டம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரனின் அறிவுறுத்தலுக்கு அமைய யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சின்னமுத்து நோய் பரம்பலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்தத் தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் மக்கள் சந் திப்பு மேற்கொள்ளப்பட்டு தகவல் கள் திரட்டப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சு விசேட சின் னமுத்து தடுப்பு வாரமாக இதனை ஒழுங்குபடுத்தியுள்ளது.

இந்த விசேட திட்டத்தின் கீழ்' இன்று (09) சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் சின்னமுத்துத் தடுப்பூசி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத் தப்படவுள்ளது.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மடத்தடி ஜுபிலி ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம், பொம்மைவெளி சுகாதார பராமரிப்பு நிலையம் ஆகிய இடங்களில் இந்தத் தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் இடம்பெறவுள்ளது.

20 தொடக்கம் 30 வயதுக்கு உட் பட்டவர்களை இந்த நோய் அதிகம் பாதித்து வருகிறது. அவர்களுக்குத் தடுப்பூசி வழங்குவதன் மூலம் சின்ன முத்து நோய் பரம்பலைத் தாடுக்க முடியும்.

எனவே இந்தத் தடுப்பூசியைப் பெற்றுச் சின்னமுத்து நோயில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுமாறு யாழ். மாநகர சுகாதார வைத்திய அதி காரி பணிமனை பொது மக்களைக் கேட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 09.11.2024

## மேஷம்

ஷcங்கள் அணுகுமுறையில் சிறிது கவனம் தேவை. உங்கள் பிரியமான வர்களுடன் பேசும் போது கவனமாகப் பேசவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதை தவிர்க்கவும். இதனால் நல்லுறவை உருவாக்க முடியும்.

இன்று அதிக செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை சமாளிப்பது இன்று கடினமாக இருக்கும். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

சளி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப் படும். குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது

## ரிஷபம்

வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஒரு உரையாடலை தொடங்குமுன் ஒரு முறைக்கு இருமுறை யோசிக்க வேண்டும். விட்டுக்கொடுக்கும் அணுகுமுறை தேவை. சிறிய விஷயங்களை பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

உங்கள் பணகளை சாமார்த்தியமாக அற்ற வேண்டும். இல்லையெனில் பணியில் தரத்தை விட்டுக்கொடுக்க நேரும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. தேவை யற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவ லையை அளிக்கும்.

சளி அல்லது முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## மிதுனம்

இன்று மகிழ்ச்சிகரமாக நாளாக இருக்கும். உங்கள் செயல்களை கவன மாக ஆற்றுவீர்கள். உங்கள் நண்பர் களின் ஆதரவைப் பெறுவீர்கள். இன் றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை சில கொள்கைகளுடன் ஆற்றுவீர்கள். உங்கள் செயல்திறன் நிரூபணமாகி வளர்ச்சி கிடைக்கும். உங்களுக்கு பாராட்டு கிடைப்ப தற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உணர்வுடன் அணுகுவீர்கள். இதனால் திருப்தி உண்டாகி உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று அதிக பண வரவு காணப்படும். பணத்தை சேமிக்கும் வாய்ப்பு கிடைக்கும். பயனுள்ள திட்டங்க ளில் முதலீடு செய்வீர்கள்.

## கடகம்

இன்று காணப்படும் பதட்டத்தை சமாளிக்க சமநிலையான அணுகுமுறை தேவை. திருப்தியான மன நிலை ஏற்பட மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறிது கடினமாக காணப்படும். சகபணியாளர்கள் ஆதரவு கிடைக்காது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அவர்களோடு நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

உங்கள் மனதில் ஏதோ இழந்தது போல உணர்வீர கள். உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று அதிக பண வரவு காணப்படாது. அப்படியே வந்தாலும் தேவையற்ற செலவுகளை சந்திப்பீர்கள்.

இன்று இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது. சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் உங்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.

## சிம்மம்

இன்று தேவையற்ற வாக்குவா தங்கள் ஏற்படும். இது உங்களுக்கு கவ லையை அளிக்கும். அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகள் இன்று கடினமாக காணப்படும். சகபணியாளர்களின் எதிர்ப்பு உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும்.

இன்று உங்கள் பொறுமை இழந்து காணப்படு வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே சூடான விவாதங்கள் ஏற்படலாம். நட்புடன் இருப்பது நல்லது.

நிதி வளர்ச்சியில் சில கட்டுப்பாடுகள் காணப் படும். முடிந்த அளவு சேமிக்க வேண்டும். தேவை யற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்குக் கவலையை உண்டாக்கும்.

பாதுகாப்பற்ற நிலை காரணமாக தலைவலி உயர முத்தம் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாவீர்கள்.

## கன்னி

இன்று மகிழ்ச்சியான நாளாக காணப்படாது. என்றாலும் பொறுமை நன்மை தரும். எதையோ இழந்தது போன்ற உணர்வு உங்கள் மனதில் ஏற்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது சில தடைகளை எதிர் கொள்வீர்கள். உங்கள் பணிகளை முறையாக திட்டமிடுவது இன்று மிகவும் அவசியம்.

மகிழ்ச்சியை தக்க வைக்க இன்று நீங்கள் உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். நிதிநிலை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். திட்டமிடுவது அவசியம்.

தேவையற்ற குழப்பங்கள் உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும்.ஓய்வாக அமைதியாக இருப்பது நல்லது

## துலாம்

இன்று சிறப்பான நாள். உங்கள் சுய முயற்சி மூலம் வளர்வீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதியின் காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி பெறு வீர்கள். பிறருடன் சிறப்பாக தொடர்பு கொள்வீர்கள்.

பணி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் பணி களை திறமையாகக் கையாள்வீர்கள். நீங்கள் முறை யான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாகவும் உண்மை யாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

இன்று வருமானம் அதிகமாகக் காணப்படும். சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வு காரணமாக நீங்கள் திடமாக இருப்பீர்கள்.

## விருச்சிகம்

இன்றைய நாள் சமநிலையோடு இருக்கும். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று திருப்தி யான நாளாக இருக்கும்.

உங்கள் நேர்மை உங்கள் மேலதி காரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். ஆடு உங்கள் சக பணி யாளர்களின் கவனத்தை இரிக்கும். உங்கள் உள்ளிருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிபடுத்துவீர்கள். இந்தப் போக்கின் காரணமாக காரணமாக உங்கள் மீதான மதிப்பு உயரும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்று அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் திருப்தியான உணர்வு காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.11.2024




ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்டல், இறைவழிபாடு போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் இன்று ஆறுதல் கிடைக்கும். உங்கள் பேச்சில் கவனம் தேவை. இன்று நண்பர்களை சந்திப்பதை தவிர்க்கவும்.

அதிகப் பணிகள் காரணமாக இன்றைய பணிகள் தள்ளிப் போகும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க புத்திசாலித்தனமாக பணிகளை ஆற்ற வேண்டும்.

இன்று நீங்கள் விரும்பும் மகிழ்ச்சி கிடைக்காது. உங்களின் மாறுபடும் மனநிலையை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இது இருவருக்கும் இடையிலான உறவை பாதிக்கும் என்பதால் இதனை தவிர்த்தல் நல்லது.

பயணத்தின்போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று சமநிலையோடு காணப்படுவீர்கள். இன்று புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பிறருடன் கலந்து பேசி மகிழ்வீர்கள்.

கடினமான பணிகளிக் கூட எளிதாகச் செய்வீர்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உண்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் இருவருக்கும் இடையே நல்லுறவு காணப்படும்.

உங்கள் நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று எளிய பணிகளைச் செய்வது கூட கடினமாக உணர்வீர்கள்.உங்கள் ஆற்றல் இழந்து காணப்படுவீர்கள். இதனால் விளைவுகளில் பாதிப்பு ஏற்படும். ஓய்வாக இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில அபாயங்களை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை உருவாக்கும் பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது எச்சரிக்கை தேவை. உறவின் நல்லிணக்கம் பாதிக்கும் வகையில் சில தேவையற்ற பேச்சுக்கள் ஏற்படலாம்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று நீங்கள் பணம் இழக்க நேரலாம்.

தொண்டை வலியால் அவதிப்படுவீர்கள். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்.




இன்று அதிர்ஷ்டமான நாள். நீங்கள் மிகுந்த முயற்சி செய்து அதில் வெற்றியும் காண்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை சிறப்பாக ஆக்குவீர்கள்.

உங்கள் சமயோசித புத்தி இன்றைய பணிகளை எளிதாக்கும். வெற்றி பெற வேண்டும் என்ற உங்கள் மனநிலை உங்கள் பணியில் பிரதிபலிக்கும்.

உங்கள் துணையிடம் உண்மையாக இருப்பீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

நிதிநிலையில் இன்று வளர்ச்சி காணப்படும். லாபகரமான திட்டத்தில் இன்று நீங்கள் பணத்தை முதலீடு செய்யலாம்.









எனது வாசகர்கட்கு!

'உங்கள் கடிதங்கள் நன்றாக இருந்தாலும், நீளமான அக் கடிதங்களைப் படிக்க அதிக நேரம் செலவழிக்க வேண்டி இருக்கிறது. அவற்றைச் சுருக்கமாக எழுத முடியாதா?' என்று சிலர் கேட்கிறார்கள். ஆகவே 'சுடுசர'த்தை இம்முறை கொஞ்சம் சுருக்கலாம் என முடிவு செய்தேன்.

இம்முறை மக்கள், தமிழரசுக் கட்சிக்குத்தான் வாக்களிக்கவேண்டும் என எனது கருத்தை ஏற்கனவே அறிவித்துவிட்டேன். அது பொது மக்களுக்கான அறிவித்தல். அதே நேரத்தில் கட்சியின் பிளவுக்குக் காரணமாய் இருக்கும் சுமந்திரனுக்கும், சிறிதரனுக்கும் சிலவற்றைச் சொல்ல வேண்டியிருந்தது.

இரண்டு வாரங்களுக்கு ஓய்வெடுக்கலாம் என நினைந்து, அவ்விருவருக்கும் சொல்ல வேண்டியவற்றை, விறுவிறுவெனச் சுருக்கமான இரண்டு கடிதங்களாக வரைந்தேன். ஆனால் உங்களின் கஷ்டகாலம், தேர்தலுக்கு முன்பாக அக் கடிதங்களை ஒருமித்து வெளியிட வேண்டி வந்திருக்கிறது. கடிதங்களில் கூட இவ்விருவரையும் தனித்தனி பிரிக்கவேண்டாமென்பது இறைவனின் முடிவு போல் இருக்கிறது.

அதனால் இடச்சுருக்கம் கருதி, 'பேரன்புடையீர்', 'வணக்கம்', 'நலம் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்' எனும் சம்பிரதாய வார்த்தைகளைத் தவிர்த்து, அவ்விரு கடிதங்களையும் ஒன்றாய் வெளியிடுகிறேன்.

♦♦♦♦♦♦

**'நன்றல்லது அன்றே மறப்பது நன்று'**

**எம். ஏ. சுமந்திரன் அவர்கட்கு,**

அடிக்கடி உங்களுக்குக் கடிதம் எழுத வேண்டி இருக்கிறது. உங்களது ஜாதகத்தில் ஏதோ கிரகப் பிழை இருக்கும் போல் தெரிகிறது. இல்லாவிட்டால் இப்படி அடுத்தடுத்து எதிரிகள் உங்களைச் சூழ்வார்களா?

தேர்தல் வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில், உங்கள் மீதான குற்றச்சாட்டுகளும் அதிகரித்துக்கொண்டே போகின்றன. உள்நாட்டில் இருந்து மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலிருந்தும் உங்களைக் குறிவைத்துப் பலரும் தாக்கி வருகிறார்கள். 'காய்க்கிற மரம் தான் கல்லடி படும்' என்ற பழமொழிக்கேற்ப பலராலும் எதிர்க்கப்படுகிறீர்கள்.

'இனத்துரோகி' என்றும், 'சுயநலக்காரர்' என்றும், 'கட்சியை உடைக்கிறார்' என்றும், 'புலிகளுக்கு எதிரானவர்' என்றும், 'கிறிஸ்தவ மதச்சார்பாளர்' என்றும் உங்களின்மேல் பலவிதமாகக் குற்றங்கள் குவிக்கப்படுகின்றன. நீங்களோ அதுபற்றி எந்தக் கவலையுமில்லாமல் 'கூலாய்' இருக்கின்றீர்கள். குழப்பமாயிருக்கிறது!

கட்சியைக் கைக்குள் கொண்டு வந்துவிட்ட திருப்தியால், வெற்றி தோல்வி பற்றிய கவலையில்லாமல் இருக்கிறீர்களா? அல்லது அனைத்துக் கட்சிகளும் உடைந்து போய் இருக்கும் நிலையில், பாரம்பரியக் கட்சியான நமது கட்சிக்குத்தான் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற துணிவா? அதுவும் இல்லாவிட்டால் எப்படியும் தேசியப்பட்டியலில் உள்ளே நுழைந்துவிடலாம் என்ற நம்பிக்கையா? உங்கள் மௌனத்திற்கான காரணம் புரியவில்லை!

முந்தநாள் தோன்றிய டாக்டர் அருச்சுனாவின் அணியினர் உட்பட அனைவரும், இலத்திரனியல் ஊடகங்களை முடிந்தளவு பயன்படுத்தி, தமது பிரச்சாரத்தை வேகமாக நடாத்தி வருகிறார்கள். உங்கள் மேல் சாட்டப்படும் குற்றங்களுக்குப் பதில் சொல்ல நிறைய வாய்ப்பிருந்தும் அந்த ஊடகங்களைக் கூட சரியான முறையில் பாவிக்கத் தெரியாமல் நீங்கள் மௌனித்திருக்கிறீர்கள். இது ஞானத்தின் தெளிவா? அஞ்ஞானத்தின் விளைவா? என்று தெரியவில்லை.

பல பேர் என்னை, நான் சுமந்திரனின் ஆள் என்று எழுதியும், பேசியும் வருகிறார்கள். நான் யாருடைய ஆளுமல்லன். இதைப் பலதரமாய்ச்

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி▲

சொல்லிக் களைத்து விட்டேன். ஒருவரைப் பாராட்டினால் அவரின் ஆள் என்றும், கண்டித்தால் அவரின் எதிரி என்றும் பொறுப்பற்று நம்மவர்கள் கணித்து விடுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை 'என் இனம் உயரவேண்டும்! என் நாடு உயர வேண்டும்! இந்த உலகம் உயர வேண்டும்!' அதற்காகவே 'சுடுசரங்களை' எய்து கொண்டிருக்கிறேன்.

உங்கள் மேல் சாட்டப்படும் குற்றச் சாட்டுக்கள் அனைத்தும் பிழையானவை என்று நான் சொல்லவும் மாட்டேன். ஒரு சிலவிடயங்களில் நீங்களும் 'சறுக்கியிருக்கிறீர்கள்'தான். மற்றவர்களுடைய சறுக்குதல்களோடு ஒப்பிடுகின்றபோது உங்கள் 'சறுக்கல்கள்' சற்றுக் குறைவாக இருப்பதுபோல் தெரிகிறது. ஏதோ ஒரு படத்தில் நடிகர் வடிவேலு 'அவளும் ஒரு பெண்தானே' என்று நகைச்சுவையாய் உரைப்பார். அது போல 'நீங்களும் ஒரு மனிதர்தானே'. அதனால் பிழையே இல்லாமல் நீங்களும் இருக்க முடியாது என நினைந்தும், உங்களை ஏற்கத் தோன்றுகிறது.

ஆசிரியர் ஒருவர், மாணவர்களிடம் 'பூனைக்கு எத்தனை கால்கள்?' என்று கேள்வி கேட்டு, மூன்று கால் எனப் பதில் எழுதியவனுக்குப் பரிசளித்தாராம். மற்றைய ஆசிரியர்கள், இது எப்படிச் சரியாகும்? என்று கேட்டதற்கு, எழுதியவர்களில் பலர் ஒரு கால், இரண்டு கால் எனப் பதில் எழுத இவன் தான் சரியான விடைக்குப் பக்கமாக மூன்று கால்கள் எனப் பதில் எழுதியிருக்கிறான். அதனால் தான் அவனுக்குப் பரிசு என்றாராம். என் முடிவும் அது போன்றது தான்.

எனக்குத் தெரிந்தவரை, போருக்குப் பின்னான சில ஆண்டுகளாக நம் இனப்பிரச்சினை பற்றிய விடயங்களைத் தனியொருவராக நின்று வழிநடத்தும் நீங்கள் நிச்சயம் இனத்துரோகியல்ல.

இலங்கையில் பெரிய '(கு)பீஸ்' வாங்கும் முன்னணி வக்கீல்களில் ஒருவரான நீங்கள், அரசியலுக்கு வந்து பெறவேண்டியதொன்று இருப்பதாகத் தெரியவில்லை. முழுநேரமாக மற்றவர்களிடம் பழிச்சொல் கேட்டாலும், அது பற்றிக் கவலைப்படாமல் இனத்துக்காகத் தொடர்ந்து இயங்கி வருகிறீர்கள். ஆகவே நீங்கள் நிச்சயமாகச் சுயநலவாதியுமில்லை.

சம்பந்தர், மாவை, முன்னாள் முதலமைச்சர், 'உதயன்' சரவணபவன் எனப் பலரும், கட்சியை உடைக்கச் செய்ய நினைந்த அளவுக்கு நீங்கள் பெரிதாய் ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே அவர்களை விட்டுக் கட்சியை உடைத்தவராக உங்களைச் சொல்வதும் பொருத்தமாய்ப்படவில்லை.

நீங்கள் 'வன்முறைக்கு நான் ஆதரவில்லை' என வெளிப்படையாய்ச் சொன்னீர்கள். அவ்வளவு தான்! அதை வைத்துத்தான், உங்களைப் புலிகளின் எதிரி என்கிறார்கள். உண்மையில் மற்றைய தமிழ்த் தலைவர்களில் பெரும்பாலானோர் மனதளவில் புலிகளுக்கு எதிரானவர்கள்தான். தமது வெற்றிக்காகவே அவர்கள் தம்மைப் புலிகளின் ஆதரவாளர்களாய் 'மனத்தின்கண் மாசோடு' காட்டி வருகிறார்கள். அவர்களோடு ஒப்பிடுகையில் நீங்கள் எவ்வளவோ மேலானவராய்த்தான் படுகிறீர்கள்.

திருக்கேதீஸ்வரத்தில் அமைக்கப்பட்ட அலங்கார வளைவினை, ஒரு பாதிரியார் தலைமையில் வந்த வன்முறைக்குழு ஒன்று உடைத்தெறிந்த வழக்கினை, பலரும் பாராட்டும்படியாய், கிறிஸ்தவ மேலாதிக்கத்தின் அழுத்தங்களுக்கு ஆபடாமல், கிறிஸ்தவராகிய நீங்கள்தான் இன்று நடத்தி வருகிறீர்கள். ஆகவே உங்களைக் கிறிஸ்தவ மதச்சார்பாளராகவும் சொல்ல முடியவில்லை.

இப்படியாக உங்கள் மீது சுமத்தப்படும் பழிகளுக்குப் பதில் சொல்லத் தெளிவான வாய்ப்பிருந்தும், ஏன் நீங்கள் மௌனித்திருக்கிறீர்கள் என்று புரியவில்லை. புத்திசாலித்தனமாய்க் காய் நகர்த்தும் திறமை கொண்ட நீங்கள், உண்மை வெல்லும் என்பதற்காய்க் காத்திருக்கிறீர்கள் என்றும் என்னால் நம்பமுடியவில்லை.

எதுஎப்படியோ, அரசியலுக்குஉங்கள்மௌனம் பிழையானதென்றே தோன்றுகிறது. எங்கள் மக்களிடம் ஒரு குணம் இருக்கிறது. பத்துப் பேர் சேர்ந்து ஒருவரைப் பழித்தாலோ, புகழ்ந்தாலோ நம்மவர்கள் காரணம் தெரியாமலே பதினோராவது ஆளாக அதனைத் தாமும் சொல்லத் தொடங்குவார்கள்.

அப்படித்தான் இன்று உங்கள் மீதான பழி, உலகளாவிய ரீதியில் வளர்ந்து கொண்டிருக்கிறது. தேர்தலுக்குச் சொற்ப நாள்களே இருக்கும் இந் நேரத்திலேனும் ஊடகங்களைப் பயன்படுத்தி உங்கள் மீதான பழியை விரைவாகத் துடைக்க முயலுங்கள்!

இது ஒன்று! அடுத்து, கட்சியை நீங்கள் கைவயப்படுத்திய பின்பும் கட்சிக்குள் நிலவி வந்த உட்பகை இன்னும் முடிந்தபாடாய் இல்லை. உங்களுக்கும் சிறிதரனுக்கும் இடையில் இன்றும் நிலவி வரும் பனிப் போரைத்தான் சொல்கிறேன்! கூட்டங்களிலும், பேட்டிகளிலும் நீங்கள் இருவரும் பேசும் போது, மணிரத்தினத்தின் 'அக்னி நட்சத்திரம்' படத்தில் பிரபுவும், கார்த்திக்கும் முட்டிக் கொள்கிற பொழுது கேட்கும் பெரிய இடிச்சத்தம் போல ஓர் சத்தம் கேட்பதாய் நினைக்கத் தோன்றுகிறது.

இன்று கட்சி உங்களின் வயமாகியிருப்பதாய்ச் சொல்லப்படுவதால் அப் பகையை நீக்கும் முதற் பொறுப்பு உங்களுடையதாகிறது. தயவு செய்து புத்தியைக் கொஞ்சம் மூடி வைத்து விட்டு இதயத்தைத் திறவுங்கள்! பகை தானாக முடியும்.

முகத்தில் பூசப்படும் கரி, முகத்தை மட்டுமல்ல ஆளையே அசிங்கப்படுத்தும். இன்றைக்குத் தமிழரசுக்கட்சியின் முகமாக இருப்பவர்கள் நீங்கள் இருவரும்தான். அந்த உண்மையை உணராமல், ஒருவருக்கொருவர் மாறி, மாறிக் கரி பூச முனைந்தால், அது கட்சிக்குக் கரிபூசிய செயலாய்த்தான் முடியும். புத்திசாலியான நீங்கள் அதைச் செய்யமாட்டீர்கள் என நினைக்கிறேன். நீங்களும், கட்சியும் உயர்வடைய வாழ்த்துக்கள்.

♦♦♦♦♦♦

**சிவஞானம் சிறிதரன் அவர்கட்கு,**

சுமந்திரனுக்கு அடுத்ததாக என்னைக் குழப்புகின்ற மௌனம் உங்களுடையதாய்த் தான் இருக்கிறது. 'ஆதரவும், ஆற்றலும் ஒன்று

தொடர்ச்சி▼

**தொடர்ச்சி▲**

சேரவேண்டும்!' என நான் எப்போதோ எழுதியிருந்தேன். என் எழுத்து உங்கள் இதயத்தைத் தைக்கவில்லை. அது வெற்று அஸ்திரமாய் விழுந்து விட்டது. நம் இனத்தின் துரதிர்ஷ்டம்.

மக்கள் ஆதரவைப் பெற்று வைத்திருந்த நீங்களும், மதியூகத்தைப் பெற்று வைத்திருந்த சுமந்திரனும், ஒருவரையொருவர் விளங்கி ஒன்று சேர்ந்திருந்தால் கட்சியின் வலிமையான வரம்புகளாக இருந்திருப்பீர்கள். அவ் வரம்புகளுக்கிடையில் கட்சியின் வெற்றி தானாகவே பயணித்திருக்கும்.

வரம்புகளில், எந்த வரம்பு உடைபட்டாலும் உள்ளே ஓடுகின்ற தண்ணீர்தான் வீணாகும். வரம்பாக நிற்கக் கூடிய உங்கள் இருவரின் மோதலால், பாதிப்படைந்திருப்பது கட்சிதான். இது தெரியாமல் உட்பகையாளர்கள் 'வால் முறுக்கி' விட அதற்கு ஆட்பட்டு, வரம்பை உடைக்கப் பார்த்திருந்து பழிதேடிக் கொண்டீர்கள். இன்று கட்சி நாலா திசையாகவும் வழிந்தோடிக் கொண்டிருக்கிறது.

நீங்களும், சுமந்திரனும் ஆளுக்காள் பகை வளர்த்து, அப் பகைக்குக் கட்சியைப் பழியாக்கியிருக்கிறீர்கள். அதனால் நேற்றுத் தொடங்கிய கட்சிகள்கூட, பாரம்பரியமான உங்கள் கட்சியைப் பந்தாடிக் கொண்டிருக்கின்றன. 'பூனை மெலிந்தால் எலியும் எட்டி உதையுமாம்' என்ற கதைதான்.

உங்களைத் தூண்டிவிடுவதில் தோளோடு தோள் நின்றவர்கள் எல்லாம், தனிக்கட்சி ஆரம்பித்துத் தனியே போய் விட்டார்கள். நண்பர்களாய் நினைந்தவர்களைக் கைவிட்டு, பகைவர்களாய் நினைந்தோரின் பக்கம் இணைந்து இன்று தனித்து நிற்கிறீர்கள். இதை உங்களின் பலம் என்பதா ? பலவீனம் என்பதா? புரியவில்லை.

ஔவையின் வாசகம் ஒன்றை நினைவூட்டுகிறேன். 'அன்பில்லாதோர் நட்பை விட வலிய பகை நன்று' என்றாள் அவள் **(வாசம் இலா வங்கணத்தில் நன்று வலிய பகை)**. என்ன காரணத்தினாலோ இன்று அங்குமில்லாமல், இங்குமில்லாமல் இருதலைக் கொள்ளி எறும்பாய்த் தத்தளித்து நிற்கிறீர்கள்.

தேர்தலில் 'சீற்' கிடைத்துவிட்ட ஒரே காரணத்திற்காக, உங்கள் பின் நின்றவர்களைக் கைவிட்டீர்களா? அல்லது கட்சிக்குள் இருந்து, பிடிக்காதவர்களின் கழுத்தறுக்கலாம் என நினைத்திருக்கிறீர்களா? ஏதும் சொல்லாமல் இருக்கின்ற உங்களின் மௌனத்தின் அர்த்தமும் புரியவில்லை. எத்தனை நாளுக்குத்தான் புத்தியாலேயே இயங்கப் போகிறீர்கள்? வெற்றி நோக்கிய வீச்சில் இதயத்திற்கே இடமில்லையா?

உங்களது தனி வெற்றிக்காக, உங்களை வாழ வைத்த இனத்தையும், உங்களை வளர்த்து விட்ட கட்சியையும் நடு வீதியில் விடுவதுதான் உங்களின் அரசியல் தர்மமா? 'வீட்டின்' ஓரிடத்தில் விரிசல் ஏற்பட்டால், அதனை உடனே அடைக்க நினைப்பதுதான் நம்மவர்கள் இயல்பு. சின்ன விரிசல்தானே என விட்டுவிட்டால், அந்த விரிசல் பெரிதாகி வீட்டையே வீழ்த்தி விடும் என்ற உண்மை, மண்ணோடு கலந்து வாழ்ந்த உங்களுக்குத் தெரியாமல் போனது எப்படி?

உங்கள் நண்பன் என்ற வகையில் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அன்பு செய்தால், அன்பு வளரும். பகை செய்தால், பகை வளரும். உங்களுக்கும், சுமந்திரனுக்கும் இடையில் பகை வளரத் தொடங்கியபோதே அதனை அடைத்து விட வேண்டுமென நான் உட்பட பலரும் முனைந்தோம். நடுநிலையாளர் கருத்தை ஏற்காமல், பகை வளர்ப்போர் கருத்தை ஏற்று இயங்கி, இன்று பரிதவித்து நிற்கிறீர்கள்.

அரசியல் பற்றிச் சொன்ன வள்ளுவன், ஒரு தலைவனுக்கு மானமும் குற்றமென்றான். மானம் குற்றமாகுமா? என்ற கேள்வி எழுந்த போது உரை ஆசிரியன் இங்கு மானம் எனப்பட்டது 'அதிமானத்தை' என்று விளக்கம் தந்தான். அதிமானமென்றால், தான் ஒன்றைச் சொல்லி விட்டதற்காக அது பிழை என்று தெரிந்த பிறகும், அதைப்பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதாம். அக் காரியத்தை ஒரு தனிமனிதன் செய்தால் அது அவனது வாழ்வைக் கெடுக்கும்! ஒரு தலைவன் செய்தால் அது அவனது இனத்தைக் கெடுக்கும்!

இலக்கிய நெஞ்சங்கொண்ட உங்களுக்கு, இலக்கியங்களினூடு சில உண்மைகளைச் சொல்லியிருக்கிறேன். ஒன்று மட்டும் தெளிவாய்த் தெரிகிறது. நீங்களும், சுமந்திரனும் ஓரணிக்குள் இருந்தாலும், இருவரும் கைகோர்த்து இருக்கவில்லை. கை முறுக்கித்தான் நிற்கிறீர்கள். இது அனைவர்க்கும் தெளிவாய்த் தெரிகிறது. இதனால் எம் இனத்திற்கு இன்னும் பேராபத்து விளையப் போகிறது.

எம்மண்ணுக்காய் உயிர் நீத்த போராளிகள் பற்றி, நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. அவர்கள் நமது இனத்தின் உயர்விற்காக இளமையை, உறவை, உயிரை என எத்தனையோ விடயங்களைத் துறந்தார்கள். அவர்களைப் போற்றி நிற்கின்ற நீங்கள் நம் இனத்திற்காக உங்கள் பகையைத் துறக்கக் கூடாதா?

உங்கள் இருவருக்கும் இடையில் இருப்பது 'தன்மானம்' என்கின்ற **'நூல்வேலி'** தான். நீங்கள் இருவரும் நினைத்தால், இந்த நூல் வேலியை நிமிடத்தில் அறுத்தெறிந்து விடலாம். நேற்றைய நண்பர்கள்தான் இன்றைய பகைவர்கள். அதனால் இன்றைய பகைவர்கள் நாளைய நண்பர்களாகலாம். தேவையென்றால் நீங்கள் இருவரும் மனம் விட்டுப் பேசக் களம் அமைத்துத்தர எங்கள் கழகம் காத்திருக்கிறது. இனத்தின் உயர்வு நோக்கியேனும் உங்களிடம் நட்பு மலரட்டும்! காணக் காத்திருக்கிறோம்!

**'எத்தனையோ மேடுபள்ளம் வழியிலே - உன்னை**
**இடறவைத்துத் தள்ளப் பார்க்கும் குழியிலே**
**சத்தியமே லட்சியமாய்க் கொள்ளடா**
**தலை நிமிர்ந்து உனை உணர்ந்து செல்லடா'**



# தேசிய மக்கள் சக்தியை ஏன் ஆதரிக்க வேண்டும்?

## பன்முக ஆளுமைகள் விளக்கம்

தேசிய மக்கள் சக்தியின் கொள்கைத் திட்டத்தை நாம் ஏன் ஆதரிக்க வேண்டும் என புத்திஜீவிகளான ஒரு தொகுதியினர் அறிக்கை மூலம் தெளிவுபடுத்தியுள்ளனர்.

அந்த அறிக்கையைக் கூட்டாக வெளியிட்டவர்கள் விவரம் வருமாறு:-

பேராதனைப் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீட முன்னாள் பீடாதிபதி எம். அல்பிரட், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் கலாநிதி ஏ. அந்தோனிராஜன், கிளிநொச்சி கொமர்ஷல் வங்கியின் டி.அரவிந்தன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானப்பீடத்தின் கலாநிதி எஸ். அறிவழகன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தின் எஸ். கபிலன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப்பீடப் பேராசிரியர் ஆர். கபிலன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானப்பீடத்தின் பேராசிரியர் பிரின்ஸ் ஜெயதேவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடத்தின் கலாநிதி எஸ். ரமேஷ், யாழ்ப்பாணம் சட்டத்தரணி. பி. ரெக்னோ, பிரதேச விற்பனை அதிகாரி பி. சஜந்தன், ஓய்வு பெற்ற பொறியியலாளர் எம். சூரியசேகரம், ரயில் நிலைய அதிபர் எஸ். ஸ்ரீவாகீசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடப் பேராசிரியர் கே. சுதாகர், யாழ்ப்பாணம் சட்டத்தரணி எம். திருவாதவூரன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞானப்பீடத்தின் கலாநிதி என். வரதன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலைப்பீடத்தின் எஸ். விமல் ஆகியோரே அவர்கள்.

அவர்களின் அறிக்கையின் விவரம் வருமாறு:-

தெற்காசியாவில் பொருளாதார ரீதியில் வளமான, ஒரு முன்னணி நாடாக, சுதந்திரதினை பெற்ற நாம் இன்று திவாலான ஒரு நாடாக மாறி நிற்கின்றோம். சுதந்திரம் பெற்றபோது எமது நாட்டில் இனங்களிடையே ஒற்றுமையும் நல்லிணக்கமும் இருந்தது. இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து கடந்த எழுபத்து ஐந்து வருடங்களாக, ஐந்து உயரடுக்கு குடும்பங்களை சேர்ந்தவர்களே, இரண்டு கட்சிகளின் ஊடாக, மாறி மாறி நாட்டை ஆட்சி செய்து வருகின்றனர். சுதந்திரத்தினை நாம் இலங்கையர்களாகவே பெற்றோம். ஆனாலும் மாறி மாறி ஆட்சியை பிடிப்பதற்காக இனவாதத்தினை தூண்டிய இந்த குடும்பங்களது எழுபத்து ஐந்து வருட இனவாத ஆட்சியின் பின்னர், நாம் இன்று இலங்கையர் என்ற அடையாளத்தை தொலைத்து, சிங்களவர்களாகவும், தமிழர்களாகவும், முஸ்லிம்களாகவும் பிரிந்து நிற்கின்றோம்.

தற்போது மேற்படி உயரடுக்கு குடும்பங்களினை சாராத - இனவாதமற்ற - தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்துள்ளது. தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் அனைத்து இன மக்களையும் சமமாக அணுகி இலங்கையர் என்று அடையாளத்தை மீள ஏற்படுத்த முனைகின்றது.

தமிழ் இயக்கங்கள் எண்பதுகளில், எமது போராட்டம் சிங்கள பேரினவாத அரசிற்கு எதிரானதேயன்றி, சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல என தெளிவாகக் கூறியிருந்தன. இன்று சிங்கள பேரினவாத அரசாங்கம் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நிலையில், எமது பிராந்திய அரசியல் கட்சிகள், தமது பிழைப்புவாத அரசியலினை முன்னெடுப்பதற்காக சிங்கள மக்கள் அனைவரையும் பேரினவாதிகளாக சித்திரிக்க முனைகின்றனர். அவ்வாறு சித்தரிப்பதன் மூலம் தேசிய மக்கள் கட்சியினையும் பேரினவாத கட்சியாக காட்டி தமது சுயநல பிழைப்புவாத அரசியலை தொடர்ந்து முன்னெடுக்கலாம் என நினைக்கின்றனர்.

முன்பு இலங்கை கிரிக்கெட் அணி உலக கோப்பையை வென்றதைத் தொடர்ந்து நாட்டு மக்கள் இன, மத, மொழி பேதம் கடந்து குதூகலித்தது, இலங்கையராக கிரிக்கெட் அணியினை ஆதரித்தனர். அதே போன்று, கடந்த ஜனாதிபதி தேர்தலில் அனுரவினது வெற்றியினை தொடர்ந்து நாட்டு மக்கள் இன, மத, மொழி பேதம் கடந்து குதூகலித்தமையுடன், இன்று இலங்கையராக தேசிய மக்கள் சக்தியை ஆதரித்து நிற்கின்றனர். இனவாதத்தினால் பிரிந்துபோயிருந்தஒருதேசத்திற்குஇலங்கையர் என்ற உணர்வினை முதலில் நடைமுறையில் தோற்றுவித்தது எமது கிரிக்கெட் அணி. அதே போன்று பிரிந்து போயிருக்கும் தேசத்தில் இலங்கையர் என்ற உணர்வினை தோற்றுவிக்கும் அரசியல் கட்சி தேசிய மக்கள் சக்தி.

உள்நாட்டு போரின் பின்னரான கடந்த பதினைந்து வருட காலத்தில் வடபகுதி மக்கள் பல பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றனர். இளைஞர்களும் படித்தவர்களும் எமது பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த வண்ணம் உள்ளனர். வெளிநாட்டு கனவுகளுடன், எமது பிரதேசத்தினை தற்காலிக தங்குமிடமாக கருதி வாழும் இளைஞர்களிடம் சமூக அக்கறையும் கூட்டு பொறுப்புணர்வும் குறைந்து

தொடர்ச்சி

# தேசிய மக்கள் சக்தியை ஏன் ஆதரிக்க வேண்டும்?

தொடர்ச்சி▲

செல்கின்றது. இளைஞர்களிடையே போதைவஸ்து பாவனையும் கும்பல் வன்முறையும் அதிகரித்து வருகின்றன.

எமதுபிரதேசத்திலிருந்துநாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் அரசியல்வாதிகள் எதிர்ப்பு அரசியலினை தொடர்ந்து முன்னெடுத்து வந்த காரணத்தினாலும், முன்னைய இனவாத அரசாங்கங்களின் பாராமுகத்தினாலும், யுத்தம் முடிந்து பதினைந்து வருடங்கள் கழிந்த பின்னரும் எமது பிரதேசத்தில் –

◆ முறையான அபிவிருத்தி திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. மூடப்பட்ட பல தொழிற்சாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை.

◆ அரச வேலைகள் பெறுவது எமது பிரதேச இளைஞர்களுக்கு இலகுவானதாக இல்லை.

◆ வேலைவாய்ப்பின்மையும் வறுமையும் அதிகரித்த பிரதேசமாக எமது பிரதேசம் காணப்படுகின்றது.

◆ இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலால் வட மாகாண மீனவர்கள் பெரும் பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றனர்.

◆ மக்களுக்கு சேவை வழங்குவதில் ஆர்வமற்ற அரச அலுவலர்களால், அரச அலுவலகங்களில் மக்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர்.

◆ சிங்களத்தில் வரும் உத்தியோகபூர்வ அரச கடிதங்களை வாசித்து புரிந்து கொள்வதில் மக்கள் சிரமப்படுகின்றனர்.

◆ சட்டம் ஒழுங்கையோ, வீதி ஒழுங்குகளையோ, முறையாக நிலை நாட்டாது, வீதிகளில் இலஞ்ச பணத்தை பெறுவதிலேயே காவல்துறை குறியாக இருக்கின்றது.

◆ மக்கள் நலன் சாராது, அலட்சிய போக்குடன் பல கிராமப்புற ஆதார வைத்தியசாலைகள் செயல்படுகின்றன.

◆ பெண் தலைமைத்துவ குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

◆ நுண் நிதிஜ் கடன் நிறுவனங்களிடம் கடன் பெற்று அதனை கட்ட முடியாததால் தற்கொலைகள் அதிகரிக்கின்றன.

◆ நகரத்திலுள்ள ஒரு சில அரச பாடசாலைகளே தரமானவையாக உள்ளன. இலவச கல்வியும் இலவச மருத்துவமும் கிராமப்புறங்களில் தரமானதாக இல்லாததால், மக்கள் நகரங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றனர் . கிராமங்களில் தமது தோட்டங்களையும் கால்நடைகளையும் கைவிட்டு நகரங்களில் அதிக வாடகைக்கு வீடுகளை பெற வேண்டிய அவல நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டு கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான பல பிரச்சினைகள் காரணமாக எமது பிரதேசத்தில் தொடர்ந்தும் வாழ முடியாது என நினைக்கும் படித்தவர்களும் இளைஞர்களும் எமது பிரதேசத்தினை விட்டு இடம்பெயர்ந்த வண்ணம் உள்ளனர். முன்பு யாழ்ப்பாணம் பன்னிரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. அது பின்னர் ஒன்பதாகி ஏழாகி தற்போது ஆறாக குறைந்துள்ளது.

எமது பிராந்திய அரசியல்வாதிகள் இப்பிரச்சினைகள் குறித்த எவ்வித பிரக்ஞையும் இன்றி இருக்கிறார்கள். அவர்கள் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வும் போர்க்குற்றங்களுக்கான சர்வதேச விசாரணையும் மாத்திரமே தமிழர்களின் பிரச்சினை எனக் கருதுகிறார்கள். ஆனாலும், கடந்த பதினைந்து வருடங்களாக இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமலும், தீர்க்க விரும்பாமலும், அதனை வைத்தே தமது சுயநல பிழைப்புவாத அரசியலினை நகர்த்தி, தமது குடும்பங்களிற்கு வளமான வாழ்வினை அமைத்து கொண்டுள்ளார்கள். இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வும் போர்க்குற்றங்களுக்கான விசாரணையும் தமிழ் மக்களின் தலையாய பிரச்சினைகள்தான், ஆனாலும் அவை மாத்திரமே எமது பிரச்சினைகள் அல்ல.

நாடாளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் காக்கப்பட வேண்டும் என இன்று கூறும் பிராந்திய அரசியல்வாதிகளது கடந்த கால அரசியல் அணுகுமுறையினால்தான் யாழ்ப்பாணத்தின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் ஆறாக குறைந்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியானது இலங்கையில் தமிழ் பேசும் அனைத்து தரப்பினரது அபிலாசைகளையும், உரிமைகளையும் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சி நிரலை கொண்டிருப்பதுடன், அம்மக்களின் எதிர்கால சந்ததியினர் தொடர்பான பிரக்ஞை பூர்வமான செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றது என நாம் உணர்கின்றோம்.

◆ தமிழ் மக்கள் உடனான அரச தொடர்பாடல் அனைத்தையும் தமிழிலே செய்வதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் எடுத்து வருகின்றது.

◆ இனவிகிதாசாரத்தை மாற்றக்கூடிய திட்டமிட்ட குடியேற்றங்கள் தமது ஆட்சியில் நடைபெற மாட்டாது என தேர்தல் விஞ்ஞாபனத்தி ல் உறுதியாக தெரிவித்துள்ளது.

◆ உறுதியளித்தபடி தமிழ் மக்களது பூர்விக இடங்களையும் அவற்றிற்கான பாதைகளையும் மீளக் கையளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

◆ அனைத்து இன மக்களும் தமது அடையாளங்களுடனும் தமக்கான தனியான கலாச்சாரங்களுடனும் கௌரவமாக வாழ்வதை தேசிய மக்கள் சக்தியின் அரசு உறுதிப்படுத்துகின்றது.

◆ தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின்படி மொத்த தேசிய உற்பத்தியில் ஆறு வீதத்தினை கல்விக்கு ஒதுக்க தீர்மானித்துள்ளனர். இதனால் விளையவுள்ள பல நன்மைகளுள் ஒன்றாக, அனைவருக்கும் தமது வீட்டிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்குள் தரமான ஒரு பாடசாலை அபிவிருத்தி செய்யப்படும். இதனால் கிராம மக்கள் தரமான நகர்ப்புற பாடசாலைகளுக்காக நகரத்தை நோக்கி இடம்பெயர வேண்டிய தேவை இருக்காது.

◆ தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின்படி மொத்த தேசிய உற்பத்தியில் மூன்று வீதத்தினை சுகாதாரத் துறைக்கு ஒதுக்க தீர்மானித்துள்ளனர். இதனால் இலவச வைத்திய சேவை வினைத்திறன் மிக்கதாகும். இதனால் கிராமப்புற ஆதார வைத்தியசாலைகளிலும் தரமான மருத்துவ சேவையினை மக்கள் பெற்றுக் கொள்ள கூடியதாகவிருக்கும்.

◆ கிராமிய பெண்கள் முகங்கொடுத்துள்ள அநீதியான நுண் நிதி கடன் சுமைகளில் இருந்து அவர்களை விடுவிப்பதற்கான திட்டங்கள் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

◆ வட பகுதியில் தொழிற்சாலைகளை மீள இயங்க வைப்பதிலும், வடப்பகுதிக்கான நிலையான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதிலும், இந்த அரசும் வடபகுதிக்கு புதிதாக நியமிக்கப்பட்ட ஆளுநரும் ஆர்வமாக உள்ளனர்.

◆ தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டபடி,

தொடர்ச்சி

# தேசிய மக்கள் சக்தியை ஏன் ஆதரிக்க வேண்டும்?

தொடர்ச்சி▲

வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் பிரச்சினைகளை இராசதந்திர ரீதியில் உறுதியுடன் எதிர்கொள்ள கூடிய அரசாக இந்த அரசு அமையும் என நாம் நம்புகிறோம்.

- இந்த அரசின் ஊழலுக்கு எதிரான செயற்பாடுகள் காரணமாக காவல்துறையினரும் அரச அலுவலங்களும் மக்கள் நலனை மையப்படுத்திய சேவையினை ஆரம்பித்துள்ளதனை அறியக்கூடியதாகவுள்ளது.
- ஊழலை ஒழிக்கும் இந்த அரசின் அணுகுமுறைக் கிணங்க, காவல்துறை வடக்கில் அதிகரித்து வரும் போதைவஸ்து பாவனையினையும், வன்முறையினையும் கட்டுப்படுத்தும் என நாம் நம்புகிறோம்.

இந்த அரசின் கொள்கைத் திட்டத்தின் காரணமாக நாமும் எமது சந்ததியினரும் வாழ விரும்பும் பிரதேசமாக எமது பிரதேசம் வளம் பெறும் என நம்புகின்றோம். இதன் மூலம் எமது பிரதேசத்தினை விட்டு இளைஞர்களும் படித்தவர்களும் வெளியேறுவது குறைவடையும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

எனவே, கடந்த கால நிகழ்வுகளில் மாத்திரம் தொங்கிக் கொண்டிருக்காது, நிகழ்கால யதார்த்தினை உணர்ந்து, இந்த மண்ணில் எமது தொடர்ச்சியான எதிர்கால இருப்பிற்காக வாக்களிக்க வேண்டிய நேரமிது.

இதுவரை நாம் வாக்களித்து நாடாளுமன்றம் சென்றவர்களால் அவர்களது குடும்பங்களே வளமான எதிர் காலத்தை பெற்றன. இனிவரும் காலத்தில், எமது மண்ணில், எமது குடும்பங்களின் வளமான எதிர்காலத்திற்காக தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்போம்.




# மலட்டு போராட்டங்கள் இனி மேல் வேண்டாம்!

## சூரியசேகரம் தமிழினத்துக்கு இப்படி ஆலோசனை

(ந.லோகதயாளன்)

தமிழ் மக்கள் ஆகிய நாங்கள் புது பாதையை நோக்கி செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். மலட்டு போராட்டங்களை நாம் தொடர்ந்து முன்னெடுக்க முடியாது என பொறியியலாளர் எம்.சூரியசேகரம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தை சேர்ந்த சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள் மற்றும் தொழில் வல்லுனர்கள் என 16 பேர் தமிழ் மக்கள் இம்முறை தேசிய மக்கள் சக்தியினருக்கு வாக்களிக்க வேண்டும் என கோரிக் கையொப்பம் இட்டுள்ளனர்.

அவர்கள் சார்பில் யாழ் . ஊடக அமையத்தில் சட்டத்தரணி புவீந்திரன் றெக்னோ, கலாநிதி செங்கரப்பிள்ளை அறிவழகன், பொறியியலாளர் எம்.சூரியசேகரம் மற்றும் விரிவுரையாளர் கபிலன் உள்ளிட்டோர் நேற்றையதினம்வெள்ளிக்கிழமைஊடகசந்திப்பை நடாத்தி இருந்தனர்.

அந்த ஊடக சந்திப்பில் பொறியியலாளர் எம்.சூரியசேகரம் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் நாம் அடிப்படை மாற்றங்களை உருவாக்க வேண்டும். சர்வதேச விசாரணைகள்தான் வேண்டும் என காலம் காலமாக காத்திருக்க முடியாது. எமக்கான தீர்வுகள் விரைவாக கிடைக்க வேண்டும். அதனை நாம் ஜனநாயக ரீதியாகத் தான் அணுக முடியும். அந்த வகையில் பொது தேர்தல் முடிந்த பின்னர் தீர்வுகள் கிடைக்கும்.

நாங்கள் எங்களை போல தெற்கில் உள்ளவர்களுடனும் சேர்ந்து வேலை செய்கிறோம். எங்களின் எதிர்பார்ப்புகள் என்ன என்பது அவர்களுக்கும் தெரியும். நாங்கள் தமிழ் மக்களுக்காக செய்யவில்லை. அனைத்து மக்களும் கூட்டாக சேர்ந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

ஜே.வி.பியினரும் ஆயுதம் ஏந்தி போராடியவர்களே. புலிகளை விட அதிகமான போராளிகளை இழந்தவர்கள். அவர்கள் அதில் இருந்து படிப்பினைகளை பெற்று , தற்போது ஜனநாயக ரீதியாக போராடுகிறார்கள். தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்கின்றார்கள். அவர்களின் கொள்கைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

புத்திஜீவிகளான நாங்கள் அனைத்து கட்சிகளையும் ஒப்பிட்டு அதில் சிறந்த கட்சியாக தேசிய மக்கள் சக்தியினரே உள்ள நிலையில் தான் அவர்களை நாங்கள் ஆதரிக்க முடிவெடுத்தோம். – என தெரிவித்தார்.

# தமிழ்த் தேசியத்துக்காக மட்டுமே வாக்களியுங்கள்!

## தமிழ் சிவில் சமூக அமையம் மக்களிடம் வலியுறுத்து




14 ஆம் திகதியன்று நடைபெறவுள்ள சிறீலங்காவுக்கான நாடாளுமன்றத் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை எடுப்பதில் தமிழ் மக்கள் கரிசனை கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பான தமிழ் சிவில் சமூக அமையத்தின் முன்வைப்பு என்ற தலைப்பில்

அமையத்தின் இணைப் பேச்சாளர்களான அருட்பணி வீ. யோகேஸ்வரன் பொ. ந. சிங்கம். ஆகியோர் ஒப்பமிட்டு இது தொடர்பான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர். அதன் விவரம் வருமாறு:-

2024 ஜனாதிபதித் தேர்தலும் என்.பி.பி எனும் தேசிய மக்கள் சக்தியும் அதன் மூலாதாரமான ஜே.வி.பி எனும் மக்கள் விடுதலை முன்னணியும்:-

கடந்த ஜனாதிபதி தேர்தல் வரை சிறீலங்காவுக்கான ஜனாதிபதித் தேர்தல்களில் சிங்கள மக்கள் சிங்களத் தேசியக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியினதோ, சிறீலங்கா சுதந்திரக் கட்சியினதோ அல்லது அவற்றினால் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டினதோ வேட்பாளரையே ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதே வழக்கம்.

ஆனால் இம்முறை, ஜேவிபியின் பிடியிலுள்ள கூட்டு முன்னணியான தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரும், ஜேவிபியின் தலைவருமான அநுர குமார திஸ்நாயக்கவைச் சிங்கள மக்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளனர். இது தமிழ் மக்கள் சிலரின் மத்தியில் சலசலப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

தங்களை இடதுசாரிகள் எனக் கூறிக் கொள்ளும் ஜேவிபி, அதற்கு முரணாக சிங்கள - பௌத்த பேரினவாதத்தைத் தமது நடைமுறை அரசியலாகக் கொண்டவர்கள். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பவர்கள். ஜேவிபி ஆரம்பம் முதலே தமிழ் மக்களை, குறிப்பாக மலையகத் தமிழர்களை சிறீலங்காவின் மீதான இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கான முகவர்கள் எனத் தமது உறுப்பினர்களுக்குப் போதித்து வருபவர்கள்.

ஜேவிபி இரண்டு தடவைகள் ஆயுதப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முயன்று தோற்றவர்கள். பின்னர் 1990களில் தேர்தல் அரசியலில் காலடி வைத்தது அக்கட்சி. அதன் பின்பும் தமிழ் மக்கள் மீதான போர் உட்பட இன அழிப்பு செயற்பாடுகள் அனைத்துக்கும் ஆதரவும் பங்களிப்பும் வழங்கி வருகின்றது. சிறீலங்கா அரசு மற்றும் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கிடையில் அரிதாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள், கலந்துரையாடப்பட்ட இனப் பிரச்சினைக்கான தீர்வுகள் அனைத்துக்கும் எதிராக சிங்கள மக்களிடையே எதிர்ப்பலைகளை உருவாக்கி வந்துள்ளது. ஜேவிபி தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கின் இணைப்பைப் பிரித்தது. சுனாமிப் புனர்வாழ்வுச் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்ட சுனாமிக் கட்டமைப்பில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு எதிராகவும் வன்னியில் அதன் தலைமை அலுவலகம் அமைக்கப்பட்டதற்கு எதிராகவும் நீதிமன்றம் வரை சென்று அக்கட்டமைப்பையும் இல்லாமலாக்கியது.

### சிறீலங்காவில் ஏற்பட்ட பொருளாதாரப் பேரழிவு

சிறீலங்கா 2022ல் பாரிய பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்தது. மக்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்கான அனைத்துத் தேவைகளுக்கும் நீண்ட வரிசைகளில் நாள் கணக்கில் காத்திருக்க வேண்டியேற்பட்டது. ஆயினும் பல அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காத நிலைமை நிலவியது. சிங்கள தேசத்துடன் வலிந்து பிணைக்கப்பட்டுள்ளதால் தமிழர்களும் இந்தப் பொருளாதார நெருக்கடியில் தவிர்க்கவியலாதவாறு சிக்கித் தவித்தனர். ஏற்பட்ட நெருக்கடிகளால் விரக்தியடைந்த சிங்கள மக்கள் தன்னெழுச்சியாக வீதிகளிலிறங்கினர்.

கட்சிகள் குறிப்பாக,ஜேவிபியின் தே.ம.சக்தி, முன்னிலை சோசலிசக் கட்சி போன்றனவும் அரசியல் விழிப்புணர்வும் ஆர்வமும் கொண்ட தன்னார்வ அமைப்புகளும் தொழிற்சங்கங்களும் செயற்பாட்டாளர்களும் சிங்கள மக்களின் தன்னெழுச்சியான போராட்டத்தில் இணைந்து கொண்டனர். இவர்களில் சிலரின் நோக்கம் அரகலயவின் வேகத்தை (momentum), தமது நலன்களுக்காக கையகப்படுத்துவது. இதனூடாக தமது தேர்தல் நலன்களுக்கு பயன் தரக்கூடிய வகையில் 'இதுவரை ஆட்சியில் இருந்த சகல அரசியல்வாதிகளின் ஊழல்களால் மட்டும் தான் பொருளாதாரப் பேரழிவு ஏற்பட்டுள்ளது' என்ற கருத்தை தேசிய மக்கள் சக்தி சிங்கள மக்கள் மத்தியில் நம்பக் கூடிய வகையில் உருவாக்கியது.

### பொருளாதாரப் பேரழிவின் உண்மையான காரணங்கள்

சிங்கள - பௌத்த பேரினவாதம் தீவு முழுமையையும் சிங்கள பௌத்த மக்களுக்கு வாக்களிக்கப்பட்டது என நம்புகின்றது. இப்பேரினவாதச் சிந்தனைக்கு அமைய இத்தீவின் யதார்த்தமான பல்லினத் தன்மையை மறுப்பதுடன் ஏனைய தேசிய இனங்களின் இருப்பையும் நியாயமான உரிமைகளையும் மறுதலித்து இன அழிப்பைப்

தொடர்ச்சி ▼

# தமிழ்த் தேசியத்துக்காக மட்டுமே வாக்களியுங்கள்!
## தமிழ் சிவில் சமூக அமையம் மக்களிடம் வலியுறுத்து

தொடர்ச்சி▲

புரிகின்றது. ஆட்சிகள் மாறிய போதும் இன அழிப்பு நிகழ்ச்சி நிரலின்படியே சிறீலங்காவின் சகல துறைகளும் கடந்த எண்பது வருடங்களாக இயங்கி வருகின்றன.

இன அழிப்பு நோக்கில் ஆட்சியை நடாத்தியமையால் பாரிய நிதி விரயம்,பொருளாதார மற்றும் அபிவிருத்தி வாய்ப்புகளின் இழப்பு,அதனால் அரசியல் மற்றும் நிதித் தேவைகளுக்காக நட்டத்தில் விற்கப்பட்ட தேசிய வளங்கள். அவற்றுடன் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்கவே கூடாது என்ற ஓர்மத்தில் 30 வருடங்களாக தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்திய ஆயுதப்போருக்காக பெருமளவு வளங்கள் விரயமாக்கப்பட்டமையுடன் பாரிய அழிவுகளும்,- பாரிய மனித வள இழப்புகளும் (இறப்புகள்,அங்கவீனம்,வெளியேற்றம்) ஏற்பட்டன. இவற்றின் திரட்டிய விளைவாக பொருளாதாரம் பேரழிவுக்குட்பட்டது.

இவ்வாறு பேரினவாதத்தால் அபாயகரமான அளவில் நலிவடைந்து வந்த பொருளாதாரத்திற்கு பேரினவாத மயமாக்கப்பட்ட நிர்வாகத்தின் இலஞ்சமும் ஊழலும் அதன் விளைவான வினைத் திறனின்மையும் மேலதிக சுமைகளாயின. ஆனாலும் இலஞ்சம்,ஊழல் வினைத் திறனின்மை என்பன பேரினவாதக் கதையாடல்களின் மூலம் சிங்கள மக்களிடமிருந்து மூடி மறைக்கப்பட்டன. அவர்களும் பேரினவாதக் கவர்ச்சியினால் கவனம் செலுத்தாதிருந்தனர்.

### பொருளாதார வீழ்ச்சியின் மீட்பர்களாக நம்பப்படும் தேசிய மக்கள் சக்தி

பொருளாதாரப் பேரழிவுக்கு காரணம் ஊழலும் இலஞ்சமும் மட்டுமே என நம்பும் சிங்கள மக்கள் அதற்கு காரணமானதென தாம் நம்பும் பழைய அரசியற் தலைவர்களாலோ அவர்களது கட்சிகளாலோ பொருளாதார வீழ்ச்சியிலிருந்து தம்மை மீட்க முடியாது என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

இந்நிலையில் இதுவரை ஆட்சியில் அமர்ந்திராததும், அதனால் ஊழற் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிராததும்,- அரகலயவில் போராட்டக்காரர்களுடன் தோள்கொடுத்து நின்றதுமான தே.ம.சக்தியைப் பாரம்பரியத் தலைமைகளுக்கான மாற்றாகவும் பொருளாதாரப் பேரழிவின் மீட்பர்களாகவும் ஜேவிபி முன்னிறுத்தியது. சிங்கள மக்களுள் கணிசமானோர் இதை நம்பிக் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்துமுள்ளனர்.

அரகலயவில் வேறு பல கட்சிகளும் தனி நபர்களும் உழைத்திருந்தாலும்,அரகலயவின் மொத்த விளைச்சலையும் தேசிய மக்கள் சக்தி என்ற புதிய முகத்தை முன்வைத்து ஜேவிபி கையகப்படுத்திக் கொண்டது.

### தே.ம.சக்தியின் ஜனாதிபதி தேர்தல் வெற்றியும் பொதுத் தேர்தலும்

தேசிய மக்கள் சக்தியினூடாக ஜேவிபி ஜனாதிபதிப் பதவியைப் பெற்றுக் கொண்டதும் சூட்டோடு சூடாகப் நாடாளுமன்றத் தேர்தலை நடாத்தி ஜனாதிபதித் தேர்தலில் தமக்குச் சார்பாகத் திரண்ட சிங்கள மக்களின் ஆதரவையும் ஜனாதிபதிப் பதவியில் இருப்பவரின் கட்சி என்பதால் உருவாகக் கூடிய சாதகமான நிலையையும் பயன்படுத்தவும் தமது ஆட்சியின் பலவீனங்கள்,வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமை அம்பலமாவதற்கான காலத்தை வழங்காமலும் தேர்தலைச் சந்திக்க விரும்பி தே.ம.சக்தி பொதுத் தேர்தலை உடனடியாக அறிவித்தது.

### தமிழ் மக்கள் மீதான தொடரும் இன அழிப்பு

கடந்த எண்பது வருடங்களாக சிறீலங்கா அரசினதும் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களதும் மூலாதார இயக்கு கொள்கையாக (Basic driving principle) இருப்பது சிங்கள பௌத்த மேலாண்மைக்கான அவாவே. இதற்காகவே அரசும் ஆட்சியாளர்களும் தமிழ் இன அழிப்பை பிரதான வேலைத் திட்டமாகக் கொண்டுள்ளனர்.

அரசானது மிகவும் நுணுக்கமாகத் திட்டமிட்டு குடியேற்றங்கள் மற்றும் பல்வேறு வழிகளில் நில அபகரிப்பினைத் தொடர்கிறது. தமிழ் மக்களின் மொழி,கல்வி, பண்பாடு,வரலாறு,பொருளாதாரம்,இயற்கைச் சூழல் மற்றும் வளங்களை சிதைக்கிறது. தமிழர்களை கொல்லுதல்,சித்திரவதை செய்தல்,காணாமற் போகச் செய்தல்,பயங்கரவாதத் தடைச் சட்டம் மூலம் தனி மனிதர்களினதும் குடும்பங்களினதும் வாழ்க்கையை சீரழித்தல் என தமிழ் மக்களின் இருப்பைச் சவாலுக்கு உட்படுத்துகிறது. அதீத இராணுவப் பிரசன்னம்,- தமிழர்களையும் பிரதேசங்களையும் திட்டமிட்டு அபிவிருத்தி மற்றும்பொருளாதாரச்செயற்பாடுகளில் புறக்கணிப்பது, தமிழ் மக்களின் நலன்களுக்குப் பாதகமான அபிவிருத்திகளை(மன்னார் காற்றாலை, கடலட்டைப் பண்ணை போன்றன) மட்டும் தமிழ் நிலங்களில் பலவந்தமாக நிறைவேற்றுவது, திட்டமிட்ட போதைவஸ்துப் பரவலாக்கம் என தம்மாலியன்ற அனைத்து வழிகளிலும் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பை எப்போதும் தொடர்கின்றது.

இன்று வரை ஆட்சிக்கு வந்த எந்தவொரு சிங்கள அரசும் தமிழ் அழிப்பு வேலைத் திட்டங்கள் எதையும் கைவிட்டதில்லை. அதற்கேற்றவாறு ஆட்சியாளர்கள் மாறினாலும் தமிழ் இன அழிப்புத் தொடர்வதற்கு ஏற்றவகையில் அரச இயந்திரம் சிங்கள – பௌத்த பேரினவாத இயந்திரமாக வலிமையாகக் கட்டமைக்கப்பட்டும் உள்ளது.

### தற்காப்புக் கவசமாக தமிழ்த் தேசியமும் தீர்வாக தேசிய அபிலாசைகளும்

தமிழ் மக்கள் இன அழிப்பிலிருந்து தமது இருப்பையும் அடையாளத்தையும் பாதுகாப்பதற்காகத் தமக்கு உரித்தான தேசிய அடையாளங்களையும் தேசிய உரிமைக் கோரிக்கைகளையும் தமக்கான தற்காப்புக் கவசமாக முன்னிறுத்தினர்.

இன அழிப்பின் விளைவாக விழிப்படைந்த தமிழ் மக்கள் தனியான மொழி,உரித்தான தாயகம், தனித்துவமான வரலாறு மற்றும் பண்பாடு,பொருளாதாரக் கட்டமைப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளமையின் அடிப்படையில் தாம் ஒரு தனியான தேசிய இனம் என்ற உரிமையைக் கோரி எழுச்சியுற்றனர். இன அழிப்பிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கான ஒரே வழிமுறையாக தேசிய இனம் என்பதால் தமக்கு உரித்தாகும் இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுயாட்சிக்கான அரசியல் முறைமை ஒன்றைத் தீர்வாகக் கோரிப் போராடத் தொடங்கினர்.

இன்றுவரை தமிழ் மக்கள் எப்போதும் தமிழ்த் தேசிய அடையாளத்தையும் தமிழ்த் தேசிய அபிலாசைகளையும் விட்டு விலகியதில்லை. அதுவே தமிழ் மக்களின் இருப்புக்கான போராட்டத்தின் ஆதாரமாக, அடிநாதமாக,

தொடர்ச்சி▼

# தமிழ்த் தேசியத்துக்காக மட்டுமே வாக்களியுங்கள்!

# தமிழ் சிவில் சமூக அமையம் மக்களிடம் வலியுறுத்து

தொடர்ச்சி ▲

இயக்கு சக்தியாக உள்ளது.

சிறீலங்காவின் அரசியல் யாப்பின் ஒற்றையாட்சித் தன்மையானது சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கே எப்போதும் ஊழியம் செய்யும் என்பதனாலும் அதன் ஓர் அங்கமான 13 ஆம் திருத்தத்தின் மூலமான மாகாண சபை முறைமை தமிழ் மக்களை இன அழிப்பிலிருந்து பாதுகாப்பதற்கான வலிமை கொண்டதல்ல என்பதனாலும் எமக்கான அரசியற் தீர்வில் இவை ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை எனத் தமிழ் மக்கள் மீள மீள வலியுறுத்தி வருவதற்கும் இதுவே காரணமாகும்.

சிங்கள அரசுகள் தமிழ் மக்கள் மத்தியில் இன அழிப்பின் விளைவாகத் தோன்றிய நாம் இன அழிப்புக்கு உள்ளாகின்றோம் என்ற விழிப்புணர்வையும்,தமிழ்த் தேசிய அடையாள அரசியலின் வளர்ச்சியையும்,- தமிழ் மக்களின் உரிமைகளை உள்ளடக்கிய தமிழ்த் தேசிய அபிலாசைகளையும் கண்டு அஞ்சுகின்றது. இந்த விழிப்புணர்வு தமது இன அழிப்பு நிகழ்ச்சி நிரலுக்கு அபாயமானதென அரசு கருதுகின்றது. தமிழ் மக்களின் விழிப்புணர்வை அற்றுப் போகச் செய்ய வேண்டும் என்பதற்காக மூளைச் சலவை செய்யும் பல வேலைத் திட்டங்களை பல்வேறு வழிமுறைகளூடாக அரசு முன்னெடுத்து வருகின்றது.

ஆனாலும் இன்றுவரை இடம்பெற்ற பொதுத் தேர்தல்களின் போதெல்லாம் தமிழ் மக்கள் தமது ஒற்றைக் கொள்கையான தமிழ்த் தேசியத்தின் பால் அணி திரண்டு வாக்களிப்பதே வழமை. ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சி, பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி, பின்னர் 1989 பொதுத் தேர்தலில் வெளிச்ச வீட்டுச் சின்னத்தில் சுயேச்சையாகப் போட்டியிட்ட ஈழப்புரட்சி அமைப்பு, நீண்ட இடைவெளியின் பின் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆசியுடன் கூட்டாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இன்று பல்வேறு தரப்புகளாகச் சிதறியுள்ளபோதும் தமிழ்த்தேசியத்தை தமது கொள்கை எனக் கூறும் முன்னாள் கூட்டமைப்பின் உறுப்புக் கட்சிகள் என, தமிழ்த் தேசியத்தின் பால் உறுதியாக நிற்பவர்கள் என தாம் நம்புபவர்களுக்கே இதுவரை வாக்களித்து வருகின்றார்கள்.

### தேர்தல் தொடர்பாக முடிவு செய்வதில் தமிழ் மக்கள் மத்தியில் தடுமாற்றம்?

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின் தமிழ் மக்கள் மத்தியில் தாம் இதுவரை கட்டிக் காத்த தமிழ்த் தேசிய அடையாளம் மற்றும் அபிலாசைகள் பற்றிக் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகக் காட்ட பல்வேறு சக்திகள் தீவிரமாக முயற்சிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்கள் வெளிப்படுத்தியுள்ள கணிசமான மாற்றம், ஊழலை ஒழிப்பதன் மூலம் நாட்டைச் சுபீட்சமடையச் செய்வோம் என்ற கோசம் மற்றும் வழமையான அனைவரும் சமம், அனைவருக்கும் அபிவிருத்தி போன்ற கோசங்களை முன்வைக்கும் தேசிய மக்கள் சக்தியின் பிரசாரங்களால் சிலர் தடுமாறுகின்றார்கள். 2009 இன் பின் நடந்த பொதுத் தேர்தல்களில் தமிழ்த் தேசியத்தின் காவலர்களாகக் காட்டி தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்றவர்களால் தமிழர் தாயகத்திற்கு எந்த விதமான பாரிய அபிவிருத்தியையும் கொண்டு வர முடியாமல் உள்ளமைக்கு அப்பிரதிநிதிகளது திறமையின்மையே காரணம் என்று பரப்பப்படும் யதாரத்தமற்ற கருத்துகளை நம்புவதாலும் இதுவரை காலமும் தேசியத்திற்கான வாக்கைப் பெற்று வென்றவர்கள் சிலரது ஒழுக்கமற்ற, தமிழ்த் தேசியத்திற்குப் பிறழ்வான நடத்தைகளாலும் தமிழ்த்தேசியத்திற்கான கட்சிகள் என நம்பப்படும் கட்சிகளினுள் அதிகரித்து வரும் பிளவுகளாலும் சிலர் விரக்தியுற்றுள்ளமையால் தடுமாறுகின்றார்கள். இன்னும் சிலரோ தமது நண்பர். உறவினர் தேர்தலில் நிற்கிறார், நேரில் வந்து வாக்குக் கேட்டுவிட்டார் என்பதற்காக முடிவெடுப்பதில் தடுமாறுகின்றார்கள். இவர்களே இத்தனை காலமாக தியாகங்களால் கட்டிக் காத்துவந்த தமிழ்த் தேசியத்தைத் காப்பதற்காக வழமைபோல் வாக்களிப்பதா அல்லது தமிழ்த் தேசியத்திற்கு எதிராக வாக்களிப்பதா எனக் குழம்பி நிற்கின்றனர்.

### புற்றீசல் போல முளைத்துள்ள சுயேச்சைக் குழுக்கள்

2009 இன் பின் அனைத்துத் தேர்தல்களிலும் தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசியத்துக்கான வாக்குகளைச் சிதறடிக்கும் நோக்கில் அரசால் பெரும் எண்ணிக்கையில் சுயேச்சைக் குழுக்கள் களமிறக்கப்படுவது வழமையாகிவிட்டது. இம்முறை இக் குழுக்களின் எண்ணிக்கை மேலும் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

இவர்களுள் பலர் வழமை போல் தமிழ்த் தேசியத்துக்கான வாக்குகளைச் சிதறடிக்கும் நோக்குடன் அரசால் களமிறக்கப்பட்டவர்கள். இவ்வாறானவர்கள் இது வரை தமிழருக்கோ தமிழ்த் தேசிய அரசியலுக்கோ எந்த வகையிலான பங்களிப்பையும் நல்காதவர்கள் அல்லது எதிரிகள், ஆனால் தேர்தலில் வென்று தமிழ்த் தேசியத்தைத் தாமே காக்கப் போவதாக சிலரும் இதுவரை தமிழ் மக்களுக்குக் கிடைக்காத அபிவிருத்திகளையெல்லாம் தாம் பெற்றுத் தரப் போவதாக சிலரும் கூறி வாக்குக் கேட்கின்றனர்.

வேறு சிலர் சில சமூகப் பணிகளைச் செய்ததனாலும் நிவாரணங்களைக் கொடுத்ததனாலும் சமூக ஊடகங்களில் பிரபல்யமாக உள்ளதாக நம்புவதாலும் தேர்தலில் தம்மால் வெற்றி பெற முடியும் என அப்பாவித்தனமாக நம்பி. தமக்கெனத் தனியான சுயேச்சைக் குழுக்களை உருவாக்கிக் களமிறங்கியுள்ளவர்கள். சிலர் புலம்பெயர் தமிழரின் நிதியைக் கையாடுவதற்கான ஒரு வழியெனவும் இன்னும் சிலர் புகலிடக் கோரிக்கைகள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளை பிரகாசமாக்குவதற்காகவும் சுயேச்சைக் குழுக்களாகக் களமிறங்கியுள்ளனர்.

இவர்கள் பலர் தனிப்பட்ட தமது நண்பர்கள்,பாடசாலைச் சமூகத்தவர்கள், உறவினர்கள், ஊரவர், ஒன்றாகப் பணிபுரிந்தவர்கள் எல்லோருமே தமிழ்த் தேசிய அபிலாசைகளையெல்லாம் கைவிட்டுவிட்டுத் தமக்கு வாக்களிப்பர் என நம்புகின்றனர்.

### சிறிய அளவில் தோன்றியுள்ள தடுமாற்றத்தை விரிவாக்குவதற்கான சதி

தமிழ் மக்கள் சிலரிடையே தோன்றியுள்ள இந்தத் தடுமாற்றத்தால் தமிழ் இன அழிப்புச் சக்திகளும் இவர்களின் கைக்கூலிகளும் அதிகார அடிவருடிகளும் ஊக்கம் பெற்றுள்ளனர். ஏற்கனவே தமிழ் மக்களை தமிழ்த் தேசிய அரசியல் நீக்கம் செய்வதற்காக மூளைச் சலவை செய்துவரும் இச்சக்திகளுடன்

தொடர்ச்சி ▼

# தமிழ்த் தேசியத்துக்காக மட்டுமே வாக்களியுங்கள்!

# தமிழ் சிவில் சமூக அமையம் மக்களிடம் வலியுறுத்து

தொடர்ச்சி▲

இணைந்து தேசிய மக்கள் சக்தியும், சிறிய அளவில் தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இத்தடுமாற்றத்தை மேலும் பரவலாக்குவதற்காகப் பல்வேறு சதி நடவடிக்கைகளைச் செயற்படுத்தி வருகின்றனர்.

இதற்காகப் பலநூறு சமூக வலைத் தளங்களும் பிரசாரகர்களும் புதிதாக உருவாக்கப்பட்டு களமிறக்கப்பட்டுள்ளனர்.

### தமிழர் தாயத்தில் தே.ம.சக்தியின் திட்டம்

தமிழ்த் தேசிய அரசியல் நீக்கம், தமிழ் வாக்குகளைச் சிதறடிப்பது போன்ற நோக்கங்களிற்கு மேலதிகமாக தே.ம.சக்தி தமிழர் தாயகத்தில் ஏற்பட்டுள்ள சிறிய குழப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்தி, தமிழ் மக்களின் வாக்குகளைக் கொள்ளையடித்து ஒரு சில ஆசனங்களையாவது பெற்றுத் தமது நாடாளுமன்றப் பெரும்பான்மையையும் உறுதிப் படுத்தலாம் என்ற எதிர்பார்ப்பிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

தே.ம.சக்தி,இதுவரை தமிழ்த் தேசியத்திற்காகவோ மக்களுக்காகவோ சிறு துரும்பைத்தானும் நகர்த்தியிராத, எமது சமூகத்தில் சிறிய அளவில் மட்டும் அறியப்பட்ட, சலன புத்தியுள்ளவர்கள் சிலரை ஊழலற்றவர்கள் என்ற போலி அடையாளமிட்டுத் தமது வேட்பாளர்களாகத் தமிழர் தாயகமெங்கும் களமிறக்கியுள்ளது.

இவர்களுள் யாராவது துர்லபமாக வெற்றிபெற்றாற்கூட அவர்களால் தமிழர்கள் மேலான இன அழிப்புத்துன்பங்களுக்கு தீர்வெதையும் பெற்றுத் தர முடியாது, திட்டமிட்டு இன அழிப்பு நோக்கங்களுக்காக தடுக்கப்பட்டுள் பாரிய அபிவிருத்திகளையும் இம்மண்ணிற்கு கொண்டுவர முடியாது. மாறாக எப்போதும் இணக்க அரசியல் பேசுபவர்கள் செய்வதைப் போல தமது தேவைகளையே பூர்த்தி செய்து கொள்ள முடியும். மேலும் அரசு இவர்களது ஆள்கள் சிலருக்கு சில தனிப்பட்ட சலுகைகளை இவர்களூடாக வழங்கி இவர்களுக்கான ஒரு வாக்கு வங்கியை உருவாக்க உதவி செய்வதன் மூலம் தமிழ்த் தேசியத்துக்கான வாக்கு வங்கியைச் சிதறடிக்கும்.

இவர்களுக்கு வழங்கப்படும் வாக்கு அரசின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் நன்றிக்கடனாக தமது எஜமானர்களின் தமிழ் இன அழிப்புச் செயற்பாடுகள் தொடர்வதற்கு உதவுபவர்களாகவும், அவர்களது பாவங்களுக்கு வெள்ளையடிப்பவர்களாகவும் இவர்கள் செயற்படுவர். தே.ம.சக்தி வேட்பாளர்களிற்சிலர் தமது எஜமானர்களால் தமக்கு வழங்கப்பட்ட தமிழ்த் தேசிய அரசியல் நீக்கப் பணிகளை ஏற்கனவே செய்யவும் தொடங்கி விட்டனர்.

இற்றைவரை ஜேவிபியோ அல்லது அதன் இன்னொரு வடிவமான தேசிய மக்கள் சக்தியோ தமது பேரினவாத நிலைப்பாடுகளைக் கைவிட்டதாகவோ. அவை இறந்த காலமெனவோ அறிவிக்கவில்லை. தமது பேரினவாத நிலைப்பாடு தவறென்று ஒப்புக் கொள்ளவோ அதற்காகத் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கவோ இல்லை. காலங்காலமாகச் சிறீலங்கா அரசுகள் தொடர்ந்து புரிந்து வருகின்ற தமிழ் இன அழிப்பை நிறுத்துவோம் எனவோ, அவற்றாலேற்பட்ட பாதிப்புகளுக்கு தீர்வைத் தருவோம் எனவோ கூறவில்லை. ஆகக் குறைந்தது இங்கு ஓர் இனப்பிரச்சினையுள்ளது, அதற்கு ஓர் அரசியற் தீர்வு தேவை என்றுகூட வெளிப்படையாகக் கூறவில்லை.

ஆனால், கடந்த ஜனாதிபதி தேர்தலில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகக் கூறிய தற்போதைய ஜனாதிபதி, பதவிக்கு வந்ததும் அதைத் தொடரவுள்ளதாக அறிவித்தமையும், அவரின் மூத்த கட்சித் தோழர்கள் தமிழ் மக்களுக்கு அரசியற் தீர்வு தேவையில்லை எனக் கூறியதும் வரப்போகும் ஆபத்தை முன்னறிவிக்கின்றன.

ஆக,தே.ம.சக்தியும் முன்னர் ஆட்சியிலிருந்த சிங்கள ஆட்சியாளர்கள் நுனி நாக்கால் கூறும் "அனைவரும் சமம், அனைத்து இனங்களுக்கும் சம உரிமை,அனைவரும் சிறீலங்கர்கள் என்ற அடையாளத்தை உருவாக்குவோம், அனைவருக்கும் அபிவிருத்தி கிடைக்கச் செய்வோம்" போன்ற வழமையான கோசங்களைத் தவிர புதிதாக எதையும் தமிழ் மக்களை நோக்கி இன்றுவரை தே.ம.சக்தி கூறவில்லை.

ஆகவே தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிப்பது?

தமிழ்மக்கள்இம்முறைமுன்னரெப்போதையும் விட கவனமாகச் செயற்பட வேண்டியுள்ளது. தேர்தலில் போட்டியிடுகின்றவர்களுள் தமிழ்த் தேசிய அபிலாசைகளைக் கட்சிக் கொள்கைகளாகக் கொண்ட, மறைமுகமாகவேனும் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிராத. சிங்கள அரசின் கைக்கூலிகளாக இயங்கிக் கொண்டிராத, மக்களுக்கு கூறுவது போல தமிழ்த் தேசியக் கொள்கையில் உறுதியாக உள்ள கட்சிகள் சிலவே உள்ளன.

சில கட்சிகளும் அவற்றின் வேட்பாளர்களும் தேர்தல் வந்தால் மட்டுமே தமிழ்த் தேசியத்தைப்பற்றிப் பேசுவர். தேர்தல் மேடைகளில் மட்டும் சமஷ்டியே தீர்வு, தமிழ் மக்களுக்கெதிராக இன அழிப்பு நடைபெறுகிறது, சர்வதேச விசாரணை வேண்டும் என்று கூறுவர். பின்னர் கதிரைகள் கிடைத்ததும் வேடங்களைக் கலைத்து ஒற்றையாட்சிக்குட்பட்டும் 13ஆம் திருத்தத்துக்குள்ளும் தீர்வைத் தேடுபவர்களாகவும். இன அழிப்பு நடைபெறவில்லை என்றும் சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்றும் ஒற்றையாட்சிக்கான ஒத்தகருத்துச் சொல்லுக்கு புது வியாக்கியானமளித்தும் அரச ஒத்தோடிகளாக மாறுவர். இத்தகைய வேட்பாளர்களும் அவர்களின் கட்சிகளும் நிராகரிக்கப்பட வேண்டியவர்கள்.

ஆகவே தமிழ் மக்கள் வாக்களிப்பதற்கான தெரிவை அனுபவ அறிவினூடாக செய்யும் போது போட்டியிலுள்ள மிகச் சில கட்சிகளும் அவற்றின் வேட்பாளர்களும் மட்டுமே தமிழ்த் தேசிய அரசியலுக்கும் அபிலாசைகளுக்கும் எப்போதும் விசுவாசமாகச் செயற்படுபவர்களாக இருப்பர்.

ஆகவே தமிழ்த் தேசிய அரசியற் கொள்கையிலிருந்து ஒருபோதும் விலகாது தடுமாற்றமேதுமின்றி தொடர்ந்து உயரிய உறுதியுடன் நிற்கும் கட்சிகளுக்கு உங்கள் வாக்குகளை வழங்க வேண்டும் எனத் தமிழ் சிவில் சமூக அமையத்தினராகிய நாம் எமது மக்களை பணிவன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சிங்கள இனவாதம், சிறீலங்கர் என்ற பொதுத் தேசியவாதம், போலிச் சம உரிமைவாதம், அர்த்தமற்ற பொருளாதார அபிவிருத்திவாதம் என்பவற்றைத் தவிர்த்து தமிழ்த் தேசியத்துக்கு மட்டுமே வாக்களியுங்கள்.

– என்று உள்ளது.